


# மீளப் பறக்கும் நங்கணாங்கள்

பாலமுனை பாறூக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
විසින් නොමිලේ පරිත්‍යාග කරන ලදී

# மீளப் பறக்கும் நங்கணாங்கள்

## - நவீன காவியம் -

සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව

Purchased under the
Authors Aid Project 2021 of the
Department of Cultural Affairs

பாலமுனை பாறூக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளப் பறக்கும் நங்கணங்கள்(நவீன காவியம்)/ பாலமுனை பாறூக்/14,பர்ஹானா மன்ஸில், பாலமுனை-03 (32354), இலங்கை/ முதற்பதிப்பு: மார்கழி 2020/ ©பாலமுனை பாறூக்/ அட்டைப்பட வடிவமைப்பு: க.பரணீதரன் / வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய் / பக்கம்: 80/ விலை: 300.00/ அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி./ தொலைபேசி:0775367712

Mela Parakum Nankanankal(Naveena Kaviyam)/ Palamunai Farook/14,Farhana Manzil, Palamunai 03,(32354), SriLanka./ First Edition: December 2020/ © Palamunai Farook/ Cover Designed by K.Bharaneetharan/ Published by Jeevanathy, Kalai aham, Alvai / Pages: 80 / Price: 300.00/ Printed at Baranee Printers, Nelliady. Tel: 0775367712

ISBN: 978-955-0958-62-7

ஜீவநதி வெளியீடு - 176



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளாத வயதில்
தங்கள் பிள்ளைகளாலும்
தள்ளி வைக்கப்பட்டு
தவித்தலையும் அபலைகளுக்கு...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி

பேராசிரியர் செ.யோகராசா

கலாநிதி த.கலாமணி

பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸ்

சந்தக் கவிமணி கிண்ணியா அமீரலி

நாட்டாரியல் கலைஞர், கவிஞர் எழுகவி ஜெலீல்

கலாபூஷணம் கவிஞர் ஏ.எம்.எம்.அலி

கவிமாமணி அல் அசூமத் அப்துல் அஸீஸ்

பதிப்பாசிரியர் க.பரணீதரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஜீவநதியின் 176 ஆவது வெளியீடாக பாலமுனை பாறூக் அவர்களின் "மீளப் பறக்கும் நங்கணங்கள்" - நவீன காவியம் வெளியாகின்றது. ஈழத்து கவிஞர்களில் பாலமுனை பாறூக் அவர்களது சிந்தனைத்திறன் மெச்சுதற்குரியதும் மரியாதைக்குரியதுமாகும். நவீன காவியங்களின் ஊடாக சமூக பிரச்சினைகளை மிகவும் சுவாரஸ்யமாக மக்களை சென்றடையக்கூடிய வகையில் படைக்கக் கூடிய வல்லமை பொருந்திய முதற்தரக் கவிஞராக பாலமுனை பாறூக் அவர்களை குறிப்பிட முடியும். அமைதியும், பொறுமையும், ஆர்ப்பாட்டமில்லாத செயற்பாடுகளுமே பாலமுனை பாறூக்கின் வெற்றியின் இரகசியங்கள் எனலாம். முதுமை என்பது மனிதர்கள் அனைவரும் எதிர்கொள்ள வேண்டிய பருவம்; அந்தப் பருவத்தே அவர்களை கண்ணும் கருத்துமாக பார்க்க வேண்டியது பிள்ளைகளின் கடமை; ஆனால் பல முதியோர் பிள்ளைகளின் அரவணைப்பின்றி ஆதரவின்றி இறுதிக்காலத்தில் அனுபவிக்கும் உள ரீதியான பாதிப்புகளோ அதிகம். இந்த கருத்தை தன் நவீன காவியத்தின் மூலம் மிக சிறப்பாக கொண்டு வந்துள்ளார் பாறூக் அவர்கள். இந்த நூல் வாசகர்களது கவனத்திற்குரியதாகவும் முதுமையடைந்த பெற்றோரை அவர்களது இறுதிக் காலத்தில் கவனமாக பராமரிக்க வேண்டும் என்ற உந்துதலை வாசகர்களுக்கு வழங்கக்கூடியதாகவும் அமையும் எனபதில் சந்தேகமில்லை. வாழ்க கவிஞர் பாலமுனை பாறூக் அவர்கள்.

**- க.பரணீதரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளப் பறக்கும் நங்கணங்கள்
# புதிய திசை நோக்கிய பயணம்

கவிஞர் பாலமுனை பாறூக்கின் மேற்குறிப்பிட்ட தலைப்பிலான நவீன காவியம் அவரது நான்காவது காவிய சிருஷ்டியாகும். முன்னையவற்றிலிருந்து வேறுபட்டுள்ள இந்நவீன காவியம் தொடர்பான எனது மனப் பதிவுகள் சிலவற்றைப் பகிர்ந்து கொள்ள முற்படுகின்ற இவ்வேளையில், தவிர்க்கவியலாதவாறு நவீன கவிஞர்கள் இருவர் நினைவுக்குள் நுழைகின்றனர். ஒருவர் தமிழ்க் கவிதை முன்னோடியான பாரதியார், மற்றொருவர் ஈழத்து நவீன கவிதை முன்னோடியான மஹாகவி.

பாரதியார் நவீன கவிதை முன்னோடி மட்டுமல்லர், நவீன காவிய முன்னோடியுமாவார். அவரது "பாஞ்சாலி சபதம்" மகாபாரதத்தின் முக்கியமானதொரு பகுதியை நவீன நோக்கில் அணுகியது. பாஞ்சாலி, பாரத மாதாவின் குறியீடு. அல்லது பெண் விடுதலையின் குறியீடு!

பாரதி,பாரதிதாசன் ஆகியோருக்குப் பின் வந்த கவிதை ஆக்கங்கள் சமூகத்தை விட்டு விலகிச் செல்வதையும், சிறுகதை, நாவல் சமூகத்தை நெருங்கி வருவதையும் கவனித்த மஹாகவி கவிதைக்கு சிறுகதை வடிவத்தின் இயல்புகளையும்,நவீன காவியத்திற்கு நாவல் வடிவத்தின் இயல்புகளையும் பயன்படுத்தினார். பின்னைய வடிவ மாற்றத்திற்கு சிறந்த எடுத்துக் காட்டு அவரெழுதிய "ஒரு சாதாரண மனிதனின் சரித்திரம்" இக்காவியம் அதன் பெயருக்கேற்ப சாதாரண மனிதனொருவனது- கிராமமொன்றில் பிறந்து நகரத்தில் தன் வாழ்க்கையை முடித்துக் கொள்ளும் மனிதனொருவனது - வாழ்க்கை பற்றியது. இவ்வாறு மஹாவியின் நவீன காவிய மரபின் தொடர்ச்சி என்று சொல்லும்படியாக நீலாவணன், நுஃமான் முதலானோரின் வரிசையில் இறுதியாக வந்து சேர்ந்துள்ளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலமுனை பாறூக். ஏற்கனவே மூன்று நவீன காவியங்களைத் தந்த இவர், சற்று வித்தியாசமான முறையில் இந்நவீன காவியத்தை எழுதியுள்ளார்.

இவரது முன்னைய நவீன காவியங்கள் முஸ்லீம் சமூகம், அரசியல், பண்பாடு குடும்பம் சார் விடயங்கள் பற்றிப் பேச, இந்நவீன காவியம் அவற்றி லிருந்தும், ஏனையோர் இயற்றிய நவீன காவியங் களிலிருந்தும் வேறுபட்டு பலரும் பேசாப் பொருள் பற்றி - முதுமை நிலை யெய்திய பெற்றோர்-அவர்களது பிள்ளைகளின் உறவுநிலை பற்றி - பேச முற்படுகின்றது. தள்ளாத வயதில், பிள்ளைகளினால் தந்தை - தாய் பிரிக்கப்படுவதும் இதனால் அவர்களுக்கு ஏற்படும் மன உளைச்சல், விரக்தி, உடல் நோய் முதலியனவும்(பார்க்க:இயல் 5,6,9)

முதியவர்களைப் பிரித்து வைக்கக் கூடாது என்று முதியோர் வைத்திய அதிகாரி கூறுவதனைப் பிள்ளைகள் புரிந்து கொண்டு மறுபடி அவர்களைச் சேர்த்து வைப்பதுமான நிகழ்வுகளினூடாக இந்நவீன காவியம் நகர்ந்து செல்கிறது.

மேற்குறிப்பிட்ட முதியோர் பிரச்சினை சமகால புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தில் முக்கிய இடம்பிடித்திருப்பதும் அவர்கள் அந்நாடுகளில் அனுபவிக்கும் சொல்லொணாத் துயரங்களும் பற்றி புலம் பெயர் எழுத்தாளர்களால்(உ+ம் பார்த்திபன், நிருபா) சிறந்த சிறு கதைகள் சில எழுதப்பட்டுள்ளன. சிறந்த திரைப்படங்கள் சிலவும் வெளி வந்துள்ளன.நாவல்கள் எதுவும் வெளி வந்திருப்ப தாகத் தெரியவில்லை. உள்ளூரில் வசதி உள்ளவர்கள் கூடத் தமது பெற்றோரை இறுதிக் காலத்தில் அவர்களது விருப்பத்திற்கு மாறாக முதியோர் இல்லத்திற்கு அனுப்பி வைப்பதைக் காண்கின்றோம். இவ்விதத்தில், இக் குறையை ஓரளவு ஈடு செய்வதாகவும், இந்நவீன காவியம் காணப்படுகின்றது.

அதே வேளையில், முஸ்லீம் சமூகத்தின் மத்தியில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் சிலவும்(எ-டு. சீதனம் வாங்குதல், ஆடம்பரமான வீடுகள் கட்டுதல்,) ஆங்காங்கே விமர்சிக்கப்படுவது பாராட்டிற் குரியது.

மேற்கூறப்பட்ட விதங்களிலே யதார்த்தப் பாங்குடன் நவீன காவியமாக நகர்கின்ற இக்காவியம், முதியோர் வைத்தியசாலை அதிகாரி கூறுகின்ற போதனை கேட்டு,பிள்ளைகள் மனம் மாறுகின்ற இடத்தில் மட்டும் ஓரளவு மரபுசார் காவியத்தை நினைவூட்டுவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்று இலட்சியப் பாங்குடன் வெளிப்பட்டிருப்பதாக எண்ணத் தோன்றுகிறது. உள்ளூர்களிலும் முதியோர் இல்லங்கள் உருவாகி வருகின்ற நிலையில்,கவிஞரது நோக்கில் இது தவிர்க்க வியலாததாகலாம்.

எவ்வாறாயினும்,ஈழத்து நவீன காவியங்களின் வரிசையில் இக் காவியத்திற்கு முக்கிய இடமொன்றுள்ளது என்பதில் ஐயமில்லை.

இறுதியாக ஒன்று. முதுமைநிலையை மட்டும் பேசு பொருளாகக் கொண்டு,முதுமை நிலையிலுள்ள ஒருவரது உடல், உளம்சார் பிரச்சினைகள், தேவைகள், குடும்ப பிரச்சினை, சமூகத்தின் பார்வை என்றவாறு பன்முகப் பார்வைகளில் தனியொரு நவீன காவியத்தை இக்கவிஞர் தரவேண்டுமென்பது எனது பேராவல்.

கவிஞருக்கு எனது நல் வாழ்த்துகள்.

**பேராசிரியர் செ.யோகராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதுமையின் ஏக்கமாய் விரியும் உளவியற் குறுங்காவியம்

கவிஞர் பாலமுனை பாறூக் அவர்கள் எழுதிய "மீளப் பறக்கும் நங்கணங்கள்" எனும் குறுங்காவியம் ஜீவநதி வெளியீடாக வெளிவருகின்றது. 1970 களில் இலக்கியப் பிரவேசம் செய்து, கடந்த ஐந்து தாசப்தங்களாக கவிதைகளை எழுதிவரும் கவிஞர் பாலமுனை பாறூக் அவர்கள் ஏற்கனவே எட்டுக் கவிதை நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இது அவரது ஒன்பதாவது நூல். நவீன குறுங்காவிய நூலான இது கொரோனா தொற்றுச் சூழலின் மத்தியில் 2020 ஆம் ஆண்டின் நிறைவுக் காலத்தில் வெளிவருகின்றது என்பதே கவிஞரின் இலக்கிய வேட்கையையும் மானிட நேயத்தையும் சுட்டி நிற்கின்றது.

கவிஞர் பாறூக் அவர்கள் கவிதா உலகினுள் பிரவேசித்து ஐம்பதாண்டுகள் ஆகின்றன. ஆயினும், கடந்த பத்து ஆண்டுகளாக அவர் இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்டு, பேசப்படும் ஒரு கவிஞராக விளங்குகின்றார். இதற்குக் காரணம் இக்காலப் பகுதியில் இவர் படைத்தளித்த குறுங்காவியங்களாகும். கொந்தளிப்பு, தோட்டுப்பாய் முத்தம்மா, எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு... என இவை தொடர்ந்து வெளிவந்து ஈழத்தில் குறுங்காவியங்களைப் படைத்தளித்த முன்னணிக் கவிஞர்களுள் ஒருவராக இவரை அடையாளங்காண வைத்திருக்கின்றன. இத்தொடர் வரிசையிலேயே நான்காவது குறுங்காவியமாக "மீளப் பறக்கும் நங்கணங்கள்" எனும் இந்நூல் வெளிவருகின்றது.

கவிஞர் பாறூக் அவர்களின் குறுங்காவியங்கள் அரச, தனியார் இலக்கிய அமைப்புகளின் விருதுகளைப் பெற்றவை. ஈழத்தில் குறுங்காவியங்களைப் படைத்தளித்த கவிஞர்கள் பலர் உள்ளபோதும் கவிஞர் பாறூக் அவர்களின் குறுங்காவியங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரணமான சராசரி மனிதர்களின் வாழ்வியலை சித்திரிப்பவை யாக உள்ளமையால் பரவலாக வாசகர்களின் வரவேற்பைப் பெற்றுள்ளன. கவிஞர் பாறூக் அவர்களின் குறுங்காவியங்களைப் படிக்கும் போது “மஹாகவி” உருத்திரமூர்த்தியின் “கண்மணியாள் காதை” ஒரு சாதாரண மனிதனின் சரித்திரம் ஆகிய காவியங்கள் நினைவுக்கு வருவது தவிர்க்கப்பட முடியாதது. மஹாகவி உருத்திர மூர்த்தி சாதாரணர்களின் வாழ்வியலை அவர்களின் எளிய மொழி யில் பாடி நவீன குறுங்காவியம் படைக்கும் மரபில் புதுமையைப் புகுத்தியவர். இதே மரபில் கவிஞர் பாறூக் அவர்களும் நவீன குறுங்காவியங்களைப் படைத்திருப்பதனாலேயே அவரின் “கவிதா விலாசம்” இன்று பேசப்பட்டு வருகின்றது.

தமிழ்க்கவிதை மரபில் திருப்புமுனையாக அமைந்த பாரதி கூறிய வார்த்தைகளை சத்திய வாக்காகக் கொண்டு தமது காவியங்களைப் படைத்து வருபவராகவே கவிஞர் பாறூக் காணப் படுகின்றார். “எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் மக்கள் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடை காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் தாய்மொழிக்குப் புத்துயிர் தருவோனாகிறான்” என்று பாரதி எழுதிய பாஞ்சாலி சபதம் காவியத்தின் முன்னுரையை நெஞ்சிற் பதித்துக் குறுங்காவியம் படைத்து வருபவராகவே கவிஞர் பாறூக் விளங்குகின்றார். அதேவேளை “காவியத்துக்குள்ள வளங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்” என்ற பாரதி வரியைக் கவனத்திற் கொள்பவராகவும் இருந்து வருவதே அவரின் குறுங்காவியங்களைச் சிறப்பாகப் படைக்க உதவியுள்ளன.

“மீளப் பறக்கும் நங்கணங்கள்” எனும் இக்குறுங்காவியம் ஏனையவற்றிலிருந்து சற்றே வித்தியாசமானது. அகமது மாஸ்டரின் வாழ்வியலினூடாக ஆசிரியர் ஒருவரின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் இக்காவியம் ஆசிரியர் மாண்பு எவ்வாறிருக்க வேண்டு மெனவும் கதையோட்டத்தினூடே வலியுறுத்திச் செல்கிறது. ஆசிரிய சேவையில் இடமாற்றம் காணும்போதெல்லாம் குடும்பத்துடன் ஆசிரியர் இடம்பெயர வேண்டியிருந்த நிலைமையையும் பிறந்த ஊரினில் படித்த பிள்ளைகள் உயர் கல்விக்காக வெவ்வேறிடங்களில் உள்ள பாடசாலைகளில் சேர்ந்து முயன்று கற்ற நிலைமையையும் கவிஞர் பாறூக் அவர்கள் எளிமையாகவே எடுத்துரைக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் திருமண விவகாரங்களினூடாக உலகியல் நடப்புகளையும் இஸ்லாமிய மார்க்கத்தின் யதார்த்த நிலைமைகளையும் எடுத்துரைப்பது அகமது மாஸ்டருக்கு மார்க்கத்தில் உள்ள நாட்டத்தினையும் கடமையுணர்வினையும் அழகுறச் சித்திரிக்கின்றது பாசத்துடன் இணைந்து ஒன்றாய் வாழ்ந்த அகமது மாஸ்டரும் அவரின் மனைவியும் சூழலின் யதார்த்தத்தால் பிரிய வேண்டி நேரிடுவதைப் படிக்கும் வேளையில் எம் கண்களில் நீரை வரவழைத்து காவியம் வெற்றி பெறுகிறது.

இக்குறுங்காவியத்தின் வெற்றி என்பது முதியோர் உளவியலை முன்வைத்த காரணத்தினாலேயே என்று துணிந்து கூறலாம். குழந்தை உளவியலை வலியுறுத்தும் அளவுக்கு முதியோர் உளவியலை முன்நிறுத்தும் வாய்ப்புகள் எம்நாட்டில் இல்லை என்றே கூற வேண்டும். முதுமைக்காலத்திலே ஏற்படும் உடல்நோய்களும் உளக்குலைவும் கவனமாகக் கையாளப்பட வேண்டியன. இது பற்றிக் குறிப்பிட வந்த கவிஞர் பாறூக்,

> "உடல் சார்ந்த
> நோய்களுக்கெல்லாம்
> மருந்து தரலாம்!
> முதுமையில்
> அறிவுத்திறனில் வீழ்ச்சி
> ஞாபக மறதி
> மனச்சோர்வு
> விரக்தி
> இப்படி
> பற்பல நோய்கள் சேரும்
> ................
> பிரியத்தோடு இருந்த உறவுகள்
> பிரிக்கப்படுவதால்
> மன இறுக்கம், விரக்தியென்று
> பிணிகள் கூடும்...."

என்று முதியோர் உளவியலின் அவசியத்தை எடுத்துரைப்பதோடு, அந்நோய்களை அகற்றுவதற்கான வழிவகைகளையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிச் செல்கின்றார். இவ்வகையில் இக்கவிதை நூலினை "முதுமையின் ஏக்கமாய் விரியும் உளவியற் குறுங்காவியம்" என்று சிறப்பித்துச் சொல்வது சரியானதே.

கவிஞர் பாறூக் அவர்கள் இது போன்ற குறுங்காவியங் களைப் படைப்பதற்கு வேண்டிய உடல் ஆரோக்கியத்தையும் உள நலத்தையும் இறைவன் அவருக்கு அருள வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன். வாழ்த்துக்கள்!

**கலாநிதி த. கலாமணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மீளப் பறக்கும் நங்கணங்கள்"
## உங்களை நோக்கி..

இலக்கிய முயற்சியில் உங்கள் அன்போடும் ஆதரவோடும் ஐம்பது வருடங்களுக்கும் மேலாக இயங்கி வருபவன்,

மரபு, புதிது, குறும்பா, வலைப்பூக்கள், நவீன காவியங்கள், சின்னஞ்சிறு கதைகள், கட்டுரைகள் விமர்சனக் குறிப்புகளைத் தருபவன்,

முகநூலிலும் கவியரங்குகளிலும் தொடர்ந்து செயற்படுவதினூடாக உங்கள் நெஞ்சங்களில் இடம் பிடித்திருப்பவன்

தருகின்ற ஒன்பதாவது நூல் -

மீளப்பறக்கும் நங்கணங்கள்.

"ஈழத்தில் கணிசமான எண்ணிக்கையில் கவிதை நூல்கள் வெளிவருகின்ற போதும், காவிய, நவீன காவிய நூல்கள் அரிதாகவே வெளிவருகின்றன"

என்பது இலக்கிய விமர்சகர்களால் முன்வைக்கப்படுகின்ற குறைபாடாகும். இக்குறைபாட்டை ஓரளவிலேனும் நிவர்த்திக்கும் வகையில்,

எனது இந்த மீளப்பறக்கும் நங்கணங்கள், நவீன காவிய நூலாக மலர்ந்திருப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. இது எனது நான்காவது நவீன காவிய நூலாகும்.

2010ல் எனது முதலாவது நவீன காவிய நூல் கொந்தளிப்பு வெளி வந்தது.

2011ல் தோட்டுப்பாய் மூத்தம்மாவும்,

2012ல் எஞ்சியிருந்த பிரார்த்தனையும் வெளிவந்தன.

பெரிய காண்டங்களாக அமைந்து விடாமல் சிறிய இயல்களாக, ஒப்பீட்டு ரீதியில் பழைய காவியங்களை விடவும் சிறியதாக, எளிய நடையில் கவித்துவ மொழியில் அமைந்து வந்த அப் படைப்புக்களுக்கு வாசகர் மத்தியில் வரவேற்பிருந்தது. யதார்த்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியமாகவும் செவ்வியல் அந்தஸ்து பெறத்தக்கவையாகவும் இலக்கிய ஆய்வாளர்களால் அவை பார்க்கப்பட்டன.

இப்பொழுது –

எனது முந்தைய காவியங்களிலிருந்து வித்தியாசப்பட்ட பொருள் வடிவத்தில், தள்ளாத வயதில் பிரிக்கப்படும் முதியவர்களின் மன உணர்வுகளைப் பாதிப்புக்களை பதிவு செய்யும் படைப்பாக இக்காவியம் உங்கள் முன் விரிகின்றது. இந்நூலுக்கும் உங்கள் வரவேற்பும் ஆதரவும் கிடைக்குமென்று நம்புகின்றேன்.

இனி – உங்களை நோக்கிப் பறந்து வந்திருக்கின்ற நங்கணங்களோடு நீங்கள் உரையாடலாம்.

**அன்புடன்,**

**பாலமுனை பாறூக்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்-1

## அறுபதை அடைந்த அகமது மாஸ்டர்

அறுபது வயது
அகமது மாஸ்டர்
அரும்பணி புரிந்து அதிபருமாகி
பள்ளிக் கூடப் பணியினை முடித்தார்

நல்லா சிரியராய் அதிபர் மணியாய்
எல்லார் மனதிலும்
இடம்பிடித் திருந்தார்

இருபது வயதில் சேவையில் இணைந்தார்
இருபத்தைந்தில்
இல்லறம் புகுந்தார்
மணமலர் ஹபீபா மனதினில் நிறைந்தார்
மாற்றம் பலப்பல வந்தன
மலர்ந்தார்
மாற்றம் வரவர மண மலருந்தான்
சேர்ந்து சென்று மணத்தது சுகமாய்!

ஏறாவூரில் ,..இறக்காமத்தில்,.
பள்ளித் திடலில்
பங்கரகமயில்
மாறாதவர்கள் சேர்ந்திருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபது அகவையில்
இணைந்தது இம்மலர்
இணைந்தே இருந்தது இதுநாள் வரையில்!

மூத்தவன் முர்ஸித்
சின்னவன் எஹியா
பிள்ளை காமிலா.

ஏறாவூரில் மூத்தவன் பிறந்தான்
இறக்காமத்தில் சின்னவன்,
"பிள்ளை"பிறந்தது பங்கர கமயில்!

சிறிய வயதில்--
பிறந்த பிறந்த ஊரினில் படித்த
பிள்ளைகள்,
தொடர்ந்தனர் படிப்பை இன்னும்
முயன்றே!

மருதமுனையில் மூத்தவன் படித்தான்
மாவனல்லையில் பிள்ளையைச்
சேர்த்தார்
கல்முனையில் தான்
கற்றான் சின்னவன்!
மூத்தவன் படித்து எந்திரியாகி
ஊரினில் -
வீடு வாகனம் காணி காசென
வந்த இடத்தில்
திருமணம் புரிந்தான்

சின்னவன் படித்து
தந்தையைப் போலவே மாஸ்ட ரானான்
பட்டப் படிப்புப் படிக்கப் போனதில்
காதலில் பட்டமும்
பெற்றுக் கொண்டதால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலிப் (galle) பிள்ளையைக்
காவிக் கொண்டு
ஊரில் வந்து உறைந்தான் சின்னவன்

காலிப் பிள்ளையைக் கூட்டி வந்ததில்
ஊரில் மிகுந்த
பரபரப் பிருந்தது

காதலுக் கென்று
வந்தவள் அவளா?
மார்க்கம் அறிந்து வந்திருப்பாளா?
அகமது மாஸ்டர் அதிர்ந்தே போனார்.
பெரும் பான்மைச் சமுகப் பிள்ளை
என்பதால்
பிரச்சினை நமக்கு வந்து சேருமா?
மதமது மாற வந்த பிள்ளையை
விடுநீ என்று விரட்டுதல் சரியா?
குமரப் பருவ "எமோசன்ஸ்"இவளை
பிழையாய்ச் செல்ல
வழி நடத்திற்றா?

காலிப் பிள்ளையைக் கூட்டிச் சென்று
காழியார் இடத்தில்
கருத்துக் கேட்டதில்
எதுவித அழுத்தமும் இன்றி அவளே
விரும்பி வந்ததாய்
விளக்கம் சொன்னாள்

திருப்தி வராமல்
திணறினார் மாஸ்டர்
திருமணம் புரிவது என்றிருந் திட்டால்
"வொலி"சொல வேண்டுமே
தகப்பன் அன்றேல் சகோதரர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரும் இல்லை என்றே இருந்தால்
காழியார்...

புதிதாய்ச் சேர்ந்த
பிள்ளைக் கிதுவே சட்டமாகுமா?
காழியாரின் உத்தரவோடு
கல்யாணத்தை முடிக்கலாம் தானே!
கல்யாணத்தை முடித்து வைப்பதா?
காலி சென்று
தந்தையைத் தாயைக்
கண்டு கதைப்பதா?

ஏலா தென்றவர் இயம்பியே விட்டால்
மார்க்கம் மாற வந்த பிள்ளையைத்
தடுத்த குற்றம் வந்து விடாதா?

உழன்றார் மாஸ்டர் ஒரு முடிவெடுக்க..
பிழையே இல்லை
பேசிப் பார்க்கலாம் என்று துணிந்தார்!

காலி சென்று கண்டு கதைத்ததில்
ஏலாதென் றவர்
இயம்பிட வில்லை.
"படித்தவள் வயது வந்தவள்
முடிவெடுக்கவும் தகுதி உடையவள்
அவளின் விருப்பம் எதுவோ
அதுவே எங்கள் விருப்பம்" என்றனர்

காலிப் பிள்ளையின் தந்தையோர்
கனவான்
பேரா சிரியராய் இருந்து
ஓய்ந்தவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மார்க்கம் என்பது வழிமுறை
நெறிமுறை
மயக்கம் தருமொரு அபினியாய்ப்
போதையாய்
எடுத்துக் கொள்வதால்
எத்தனை பிரச்சினை
வணக்கம் என்பது கோயிலில் மட்டுமா?
நடத்தை செயல்கள் அனைத்துமே
வணக்கமாய்
அமைந்திட வேண்டும்"
என்றவர் சொன்னதில் இருந்த உண்மையை
ஏற்றார் மாஸ்டர்
"இஸ்லாம் சொல்வதும்
இதுதான்" என்றார்.

காலிப் பிள்ளை கதீஜா வானது
ஊரில் அந்தக் காதல் ஜோடி
பெயரொடு வாழ்ந்தது
"ரியூசன் ரீச்சர்ஸ்"!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்-2

## இல்லறம் இணைந்த காமிலாப் "பிள்ளை"

பங்கரகம ஊர் பாயிஷ் தம்பி
வந்து கேட்டார் காமிலாப் பிள்ளையை
ஏஎல் படித்த கையொடு பிள்ளையை
இவரின் கரத்தில் சேர்த்தனர் பெற்றோர்

நல்ல பையன்
நளீமியா மாணவன்
எஸ்எல்ஏஎஸ் சித்தி அடைந்தபின்
இவளை வந்து கேட்டார் அவரே!

"எதுவும் வேண்டாம் சீதனம் என்றார்
இஸ்லாம் சொன்ன வழிமுறை
இதுவென
எடுத்தும் சொன்னார்

"கரும்பு தின்னக் கைக்கூலி கேட்பதா?
பொருத்தமே இல்லை
வெறுத்தது இஸ்லாம்
சீதனமாக-
வீடு வாசல் பெற்றிருந்தாலும்
வாடகை கொடுத்திட வேண்டுமென்" றாரவர்

ஆண்கள் சொத்தில் இருபங்கு பெறுவர்
பெண்கள் பெறுவது ஒரு பங்கேதான்
ஆதலால்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு வாசல் அமைக்கும் பொறுப்பு
ஆண்களுக் குரியது என்றவர்
சொன்னார்.
சீதனம் கேட்டு வதைப்பதால் தானே
உழைக்கப் பெண்களும்
ஓடிச் செல்கிறார்
வீட்டு வேலையாய் வெளிநாடு செல்கிறார்
மஹர்ரம் இலாத ஆண்களோ டவர்
கூடிச் செல்கிறார்
வேதனை இதுவே என்றார் மேலும்
"றிஸானா" "பெயரும்
பேச்சில் வந்தது.

அகமது மாஸ்டர்
தன்னை அளந்தார்
சிப்பி யோட்டில் நீத்துக் கட்டடம்
இரண்டறை வீடாய்ப்
பெற்றவர் அவரே!

மனசு ஏனோ குறுகுறுத் திட்டது
பிழை விட்டோமா?
பிழை விட்டோமா?
மூத்தவன் படித்து எந்திரி யானான்
கேட்ட இடத்தில் திருமணம் முடித்தான்
வசதி வாய்ப்புகள்
இருந்த பெற்றோர்
வழங்கிய தெல்லாம் சீதன மாகுமா?

பிள்ளைக் கென்றுதான் சேர்த்தனர்
பெற்றோர்
பிள்ளையின் பெயரில்
எழுதியும் வைத்தார்
அன்பளிப் பென்றிதைப் பெயரிடலாமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவும் சீதனம் என்றுதான்
ஆகுமா?

கேள்விகள் தொடராய் வந்தன
மனதில்
மூழ்கிக் கிடந்தார் சிந்தனைக்
கடலில்...,.!

தேகம் குளிர்ந்த
தென்றலாய் வார்த்தைகள்
தேனாய் வந்து காதில் நுழைந்தன.
“பிள்ளைப் பருவப் பதினொரு வயதில்
நல்ல படியாய் மதிப்பிட் டீர்கள்
பள்ளிச் சூழலைப்
பொருத்தமாய்ச் செய்து
பிள்ளைக ளெம்மை ஊக்குவித் தீர்கள்
உற்சாகத்தை
ஊட்டிவைத் தீர்கள்
பெற்றோ ருக்கும் பிள்ளைகள் பற்றிய
நம்பிக்கை வரவும் நன்றாய் உழைத்தீர்
முன்னேற்றங்கள் எங்களூர் பெறவே
முயன்று உழைத்த உங்களினாலே
இன்று நாங்களும் இவ்வாறிருக் கிறோம்”

என்றெலாம் பாயிஷ்
எடுத்துச் சொல்ல
தென்றல் வந்து தாலாட்டியதாய்
உணர்ந்தார் மாஸ்டர்!

நாற்பது வருட சேவை நினைவை
மீட்க வைத்தது
பாயிஷின் பேச்சு.
ஆசிரியராகச் சேவையில் இணைந்து,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபராகி;
முதலாந்தர அதிபர்
என்ற நிலைவரை உயர்ந்து
ஓய்வு பெற்றதை உள்ளம் நினைத்தது.

எங்கு மாற்றம் வந்த போதிலும்
சென்று சேவை செய்து வந்த
அந்தக் காலம் நினைவில் வந்தது.

மனைவியோடும் மக்களோடும்
மாறி மாறி,
சின்னஞ் சிறிய கிராமங்க ளெல்லாம்
சுற்றி வந்ததை
எண்ணி எண்ணிப் பார்த்தது மனசு.

அரசியல் வாதியின் பின்னால் அலைந்து
இரத்துச் செய்க
இடமாற்றத்தை
என்று கேட்டதாய் ஞாபகம் இல்லை.

சென்று சேர்ந்த சிறிய ஊர்களில்
பற்றைக் காடாய் இருந்த இடங்களை
வெட்டிச் சாய்த்து
சுத்தம் செய்ததை..
பெற்றோ ரோடு ஆசிரியர் களும்
ஒத்துழைப்போடு அவரோடு நடந்ததை
இப்பொழுதவரின்
உள்ளம் நினைந்தது.

கட்டட வசதிகள்
விவசாயத் தோட்டம்,..
இப்படி இப்படி,..எத்தனை பணிகள்.
தேசிய மட்டப் போட்டிகள் வென்று
பேசப் பட்ட அதிபரானதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைத் தோட்டப் போட்டியில்
நாடளாவிய ரீதியில் வென்றதை...
எண்ணிப் பார்த்து மலர்ந்தது மனசு!

சின்னஞ் சிறிய பாடசா லைகள்
சிறந்து உயரப் பங்களித் திருந்ததை
பென்னம் பெரிய பாடசா லையாய்
பின்னர் அவையும்
வளர்ந்து கொண்டதை,.
எண்ணிப் பார்த்து
இதயம் குளிர்ந்தது!
பின்தங்கிய ஊர்களுக் கெல்லாம்
சென்றிருக் கிறார்
கடமைக் காகவே!

அதிபர் கடமைக் கென்று சென்றவர்
அங்கு -
பள்ளி வாசலில் முஅத் தினாகவும்
லெப்பை யாகவும்...
பிணக்கு களுக்கு இணக்கம் காணும்
தலைவ ராகவும்
மக்களோடு மக்களாய் வாழ்ந்ததை...
மதிக்கப் பட்டதை,.
நினைத்துப் பார்த்து மகிழ்ந்தது
மனசு!

இப்பொழுது-
பாயிஷ் தம்பி பேசப் பேச
இரட்டிப் பானது அவரின் மகிழ்ச்சி

விழிகளில் வழிந்தது ஆனந்தக் கண்ணீர்
விரல்கள் அவற்றை
ஏந்தி எடுத்தன!

* றிஸானா- சவூதியில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இலங்கைச் சிறுமி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்-3

## இன்பம் சுகித்த சூரியக் கிறுக்கன்

இரவு முழுவதும் நிலவுப்
பெண்ணொடு
மறைந்து மறைந்து மகிழ்ந்து
சுகித்த
சூரியக் கிறுக்கன்,....
கடலில் விழுந்து
எழுந்தான் குளித்து!

இன்பம் சுகித்த இவனை
யாரும்
இடையிற் புகுந்து
எழுப்பிவிட் டாரோ?
கடமையில் யாரும்
குறைசொன் னாரோ?
சினந்து சிவந்து
தெரிந்தான் கிறுக்கன்

தொடங்கும் போதே
தீயாய்ச் சுட்டான்
ஆ,,!
அவன் பார்வை
அனலாய்த் தெறித்தது!

கடூரமாகவே
கடமை புரிந்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவதாய் இல்லை
வெறித்தான் புவியை
குதித்துப் பாய்ந்து
கொதித்துக் கொண்டே
உச்சியில் நின்றான்!

விருந்துபசாரம் நடந்துகொண் டிருந்தது
அகமது மாஸ்டரின்
இல்லத்தில் ஆங்கே!

பந்தியிட் டிருந்தனர்
பந்தலின் கீழே!
பங்கரகம ஊர் இருந்து வந்தவர்
பந்தியில் அங்கு
முந்தியிருந்தனர்

அகமது மாஸ்டர்
உணவை ஒழுங்கைப் பரிமாறல்களை
அடிக்கடி பார்த்துக்
கட்டளை யிட்டார்

பாயிஷ் தம்பி
பக்கத்தில் நின்று
"இன்னும் கொஞ்சம் எடுங்கள்" என்று
வந்திருந்தோரை உபசரித்திட்டார்!

முர்ஸித் எஹியா இருவரும்
முன்னும் பின்னுமாய் ஓடித் திரிந்து
ஆண் பெண் பந்தியை
அவதானித்தார்!

விருந்து முடிந்து
வெளியே வந்தவர்
"வெப்பம்,..சூடு,.வியர்வை" என்றே
பதறிக் கொண்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கரகம ஊர் இருந்து வந்தவர்
பாய்களைக் கேட்டு வாங்கிக் கொண்டு
சாய்ந்தனர் அங்கே!

விருந்தில் கலந்த
நெருங்கிய உறவினர்
மரங்கள் விரித்த குடையின்
கீழே
வந்து அமர்ந்து கதைக்கத் தொடங்கினர்

சூரியக் கிறுக்கன் தொடர்ந்தான்
பணியை,..,
குணதிசை தொடங்கிய அவனின்
கடமை
குடதிசை நோக்கியும்
நீண்டு விரிந்தது.

குதித்தும் பாய்ந்தும்
கடமை புரிந்தவன்.,
களைத்துப் போனான்
சூட்டைக் கொஞ்சம் தணித்தும் இருந்தான்

பங்கரகம ஊர் இருந்து வந்தவர்
பாயில் இருந்து எழுந்து கொண்டு
அந்தி பட்டுப் போனதே என்று
ஆரவா ரித்தனர்!

குடைசாய்ந்து கிடந்தான் கிறுக்கன்
குடதிசை வானில்!

பரபரப் பானது இல்லம்,,,!
பலரும் சேர்ந்து
பம்பர மாகினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுக் கின்னும்
அழகு சேர்ப்பதாய்
காலிப் பிள்ளையும்
முர்ஸித் மனைவியும்
காமிலாப் பிள்ளையை சோடனை செய்தனர்!

அங்கும் இங்கும் தொட்டுத் தொட்டு
அவர்கள் செய்த
சோடனை யாலே
கூச்சப் பட்டுச் சிணுங்கினாள் காமிலா!

கேலிப் பேச்சும்
கிண்டலும் சேர
வெட்கப் பட்ட காமிலாப் பிள்ளை
விழிகளைத் திறக்க
விரும்பா தவளாய்
மூடிக் கொண்டு
"ம்..ம்." என்றாள்!

தென்னங் குருத்து
வைத்துக் கட்டிய
வாகன மொன்று முன்னால் நின்றது.

மாப்பிளைத் தம்பியின்
மனசு நிறைந்த மகிழ்ச்சி
அவரின்
முகத்தில் தெரிந்தது!

கண்களால் சாடை
காட்டினார் பாயிஷ்
காமிலா அவரின்
அருகே வந்தாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக வேண்டிய பயணம் இருந்தது
தாயும் தந்தையும்
நின்ற இடத்தில்
காமிலா வந்தாள்
பாயிஷும் சேர்ந்தார்!

தாயின் தோளில் சாய்ந்த காமிலா
அழுது வடித்துக்
கண்ணீர் சிந்தினாள்
பாயிஷ் தம்பி
அகமது மாஸ்டரை அரவணைத் திட்டார்!

விழிநீர் சிந்திய முகங்களைத் துடைத்து
விடைகொடுத் திட்டனர்
சகோதரர் இருவரும்!

சூரியக் கிறுக்கனைக்
காணவே இல்லை!

மங்கிக் கிடந்தது
மாலைப் பொழுது,,,!
உள்ளம் அழுதது..
பிரிந்து சென்றனர் பிள்ளையும்
பாயிஷும்!
பிரார்த்தனை அங்கு ஓங்கி
ஒலித்தது,
விண்ணிலும் முட்டியே,..!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்-4

## பாசம் பிரித்த நேச உறவு

நாட்கள்;
வாரம் மாதங்களாகி
நடந்ததோ ஓடியதோ
கலண்டரின்
தாட்கள் அனைத்தும் முடிந்தன
ஆதலால்-
அகவை கரைந்தது
சுழன்றது சக்கரம்!

காலச் சக்கரம்
கடந்து கடந்து
கலண்டரின் தாட்கள்
முடிந்து முடிந்து
கரைந்து போனது ஆண்டுகள் ஐந்து!
அறுபத் தைந்தை
அடைந்தார் மாஸ்டர்!

அகமது மாஸ்டரின் இல்லத்தில் ஆங்கே
குடும்பம் வந்து
கூடி இருந்தது!

தந்தையும் தாயும் தங்கையும்
சகோதரர் இருவரும்
அங்கிருந்தார்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்திக் கொண்டார்
மூத்த மகனார்
"எந்தக் கதையும்
எவரும் இனிமேல்
இங்கு கதைப்பதை ஏற்றிட மாட்டேன்"
என்றவர் சொன்னார்!

"தந்தை என்னுடன் வந்து விடட்டும்
தங்கை
தாயைக் கொண்டு செல்லலாம்
இந்த வயதில்
இவர்கள் தனியாய்
இங்கு இருப்பது எப்படிப் பொருத்தம்?
முதுமை வயசில்
உதவி இன்றி இருப்பது சரியா?

சின்னவா நீயே வந்திரு வீட்டில்
இன்னும் நீயேன்
வாடகை வீட்டில்
குந்தி யிருக்கிறாய்?

எங்களை மறந்தாய்
இளமை உணர்வில்
காதல் காதல் என்று பறந்தாய்
கொண்டுவை உனது காதல் மனைவியை.!
வசதி குறைந்தநீ
வாடகை வீட்டில்
வசிப்பதா? வா,.வா..!"

வசனம் பேசினார்
மூத்த மகனார்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பரிவு பாசம் பற்றெனக் கொண்ட
பிள்ளைகள் நாங்கள்
எதனைக் கதைக்கும்
ஊர் இதைப் பார்த்து”
என்றும் கொதித்தார்...!

தந்தையை மூத்தவர்
எடுத்துக் கொண்டார்
தங்கை
தாயை அழைத்துச் சென்றார்
வந்து அமர்ந்தார்
சின்னவர் வீட்டில்...!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்-5

## அடுக்கு வீட்டில் அகமது மாஸ்டர்

மூன்று அடுக்கில் உயர்ந்த மாளிகை!
மூத்தவன்
உடைத்து உடைத்து
செப்பனிட் டிருந்தான்.

வழ வழ வென்று
வழுக்கிய தரையில்
உருவம் தெரிந்தது!

"வயசு போனவர் வாப்பா
வசதி உள்ளதாய்
பொருத்தமாய்
ஒரு இடம் கொடுங்கள்"
என்றார் மகனார்!

மருமகள் நுழைந்த அறைக்குள்
பின்னால்-
மாஸ்டர் வந்தார்!
ஏஸி இருந்து குளு குளுத்தது!
"இதில்தான் இருங்கள்"
என்றார் மருமகள்
ஈஸிச் செயாரில் இருந்தார் மாஸ்டர்
ஏந்திக் கொண்டது
தொட்டிலாய் அதுவே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் நாள்-
சும்மா வீட்டைச்
சுற்றிப் பார்த்தார்...
மூன்று அடுக்கிலும் ஏறிப் பார்த்தார்!

மூன்றாம் அடுக்கில்
ஆள் இருப்பதாய் அரவமே இல்லை...!

ஆளில்லாமல்....
அளவுக்  கதிகமாய்
ஆடம்பரந்தான் இதுவா?
வீண்விரயத்தில் இதுவும் வருமா,?

எதிர்காலத்தைத் திட்டமிட் டதாய்
இப்படி வீட்டைக்
கட்டி வைப்பது
இலாபம் தருவதா?

மனசில் ஏனோ கேள்விகள் வந்தன.
ஆடம் பரத்தை
அண்ணல் நபிகள்
விரும்பவே இல்லை
என்ற நினைப்பும் கூடி வந்தது.
இரண்டாம் தட்டுக்கு
இறங்கினார் மாஸ்டர்
இரண்டாம் தட்டில்-
அவர்கள் இருக்கும் தடயம் தெரிந்தது!

"ட்ரெஸ்ஸிங் றூமி"ல்
அடுக்கி வைத்த
ஆடைகள் இருந்தன
கழற்றப் பட்டவை வேறாய்க்
கிடந்தன!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஸ்ரடி ஹோலி"ல்
படித்து மடித்த இடங்கள் தெரிந்த
நூல்கள் இருந்தன.
பத்திரிகை களும் பரவிக் கிடந்தன.
பளபளத்த உறைகளோடு
புதியன வாகவும்
நூல்கள் இருந்தன
கைபடா திருக்கலாம்!

"பெட் றூம்"
வடிவாய் அழகாய்
வடிவமைத் திருந்தனர்
"வாஸ்து" பார்த்துக் கட்டி இருப்பரோ?
மங்கிய ஒளியில்....
மெல்லிய வாசம் பரவி வந்தது.
யன்னலைத் திறந்தார்...
ஒருசிறு தொலைவில்
கடற்கரை,.!

கடலின் அலைகள்
வீட்டின் அடியில்
விழுந்து செல்வதாய்க்
காட்சி தெரிந்தது.

"பாத் றூம்-
"பெட் றூமோ"டு
ஒட்டியே இருந்தது!

கீழே இறங்கினார்-

"கிச்சின் விசிற்றிங் ஹோள்
கொம்மன் ஹோள்
ஸ்விம்மிங் பூள்..,"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன நானொரு
சின்னப் பிள்ளையாய்,,.
வெட்கப் பட்டு,...
இழுத்துக கதவை மூடும் போது,
ஒன்றரை வயதில் பார்த்த
பேத்தி,...
கண்களை உருட்டிக்
கைகளை அசைத்தாள்

மொளு மொளு என்று
அழகாய் இருந்தாள்
மூன்று வயது ஆகி யிருப்பாள்!

கட்டிலில் மாஸ்டர் கண்களை மூடினார்
அணைத்துக் கொண்டது
அவரைத் தலையணை!
மிருதுவான மெத்தைக் குள்ளே
தேகம் புதைந்தது.!

நினைவா கனவா?
நின்றார் ஹபீபா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்-6

## பிள்ளையின் வீட்டில் பெண்மணி ஹபீபா

உதவிப் பிரதேச
செயலருக் கான
உத்தியோக வாசஸ்தல மது!
சிறியதாகவே அமைந் திருந்தது
அனைத்து வசதியும்
அதற்குள் அடக்கமாய்,.!

பாயிஷ் தம்பி
பிள்ளை காமிலா
பேரன் ஸாக்கீர்
இவர்களோடு இன்னும் ஒருவராய்
ஹபீபாப் பெண்மணி!

நகரமாகி வருகிற கிராமம்
காட்டை அழித்து
வீதி அமைத்தனர்
கனரக இயந்திரம்
வேலையில் இருந்தது.
ஆற்றோரமாக--
வீதி அமைக்கும்
வேலை நடந்தது.

பச்சைப் பசேலென இருந்த காடுகள்
பசுமை இழந்து
உயிரை விட்டன!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொடிகள்,..நிமிடம்...மணித்துளி
மறைய...மறைய
மாற்றம் நடந்தது!
ஒன்றின் இழப்பு
ஒன்றின் உதயமாய்
மாற்றம் நடந்தது!

எட்டிப் பார்த்தார் ஹபீபா
யன்னலைத் திறந்தே!

சட்டம்பி வாத்தியின்
புத்திரி ஹபீபா
இயற்கை கொஞ்சிய ஊரில்
பிறந்தவள்.!
மரங்கள் தோப்புகள்
வயல்நிலம் ஆறு
தந்த அணைப்பில் அழகில் வளர்ந்தவள்!

குட்டிப் பிள்ளையாய்
சுட்டிப் பெண்ணாய்
கட்டைப் பாவாடை சட்டை அணிந்து
மற்றப் பிள்ளைகள்
ஒத்துழைப்போடு
சுற்றித் திரிந்தவள்,...
உள்ளே-
ஒழுங்கைகட் குள்ளே!

அகமது மாஸ்டரின்
அரவணைப்போடு
அன்பு மனைவியாய்....
ஊர் ஊராக-அவர்
மாற மாற..
பேராதரவாய்,,பிரியமாய்
பிரியா திருந்தவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை மூன்றைப்
பெற்று வளர்த்தவர்
பிரிந்து வந்து
பேரனோடு ஒட்டி இருக்கிறார்!

நாலரைத் தசாப்த
திருமண உறவில்
புருசனே சொர்க்கமாய்ப்
பூத்துச் சொலித்தவள்

நல்லது கெட்டதில்
கலந்து கதைத்தவள்
எல்லாம் அவரே
என்றும் இருந்தவள்.,

இரண்டரை வயதுப் பேரனோடு
இருப்பதில்
ஒருவித திருப்திதான்
எனினும்
இடைவெளி தெரிந்தது.

தனக்கென் றொருவர்
இல்லை யென்பதாய்
பிரத்தி யேகமாய்
வெட்ட வெளிச்சமாய்
சுக துக்கங்களைப் பகிர்ந்து கொள்ளவோர்
துணை இல்லாததாய்
இடைவெளி தெரிந்தது!

தனித்துப் போனோம் என்ற உணர்வில்
சோர்ந்தவராகத்
தெரிந்தார் ஹபீபா!

பெருமூச் செறிந்தார்
பேரனை முகர்ந்தே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்-7

## மாலையோடு உலவிய பா.உ

வேலை நடந்தது!

தேர்தல் விரைவில்
வருமெனத் தெரிந்ததால்
திட்டமிடாத வேலை நடந்தது!
மாலையோடு உலவினார் பா.உ.
வால்கள் பின்னால்
வளைய வந்தன.

உத்தியோ கத்தர்கள் ஊழியர்
அனைவரும்
வெளியில் வேலையில் களத்தில்
நின்றனர்!
பா.உ. பணிப்பு!

குறிச்சி குறிச்சியாய்ப் பிரித்து
விழாக்கள் நடந்தன-
முப்பெரு விழாக்கள்!

ஊரெலாம் சோடனை
வீதியெங்கணும் "பௌர்கள்"
வயல் நிலங்களில்
பாரிய இயந்திரப் பவனி!"!
இரவிரவாகவே இருந்து
விழாவினைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிட் டிருந்தனர்
கச்சித மாகவே!

துண்டுக் கவிதைகள்
தொங்கின பௌனர்களில்
பட்டாஸ் வெடித்தது
குரவை ஒலித்தது
உள்ளூர்க் கவிஞனின்
வர்ணனை மிதந்தது
பீரங்கி வாய்களும்
பேசிப் பெருக்கின.

வேலை தொடக்க நாள்:
காலையில்
வீதி அமைப்பெனத்
தந்தையின் பெயரில்
பெயர்ப் பலகையினை நட்டார் பா.உ.

மாலையில்
வடிகால் அமைப்பு
வயலில் இருந்து நீர் வெளியேற்றம்
பாரிய இயந்திரப்
பவனியில் கலந்து
இயந்திர மொன்றை இயக்கினார்
பா.உ.
"மூணுநாள் போட்ட யூனிபோம்"
என்று
தெரிந்தவ ரிடத்தில்
சொன்னான் "Body guard"

வேலை,...

தலைக்கு மேலே
வேலை இருந்தது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலுநாளாக
வேலையிலேயே மூழ்கி இருந்தான்
முர்ஸித்.
எந்திரி அவனே
இந்த வேலையும் அவனின் பொறுப்பே!

தேர்தல் காலக் கண்துடைப் பிதுவென
கூறித் திரிந்தனர் எ.க.உ.கள்

தேர்தல் தொடங்கி
முடிவதற் குள்ளே
வேலைகள் நிற்கும் என்றனர்
அவர்கள்
சாத்திய அறிக்கை உண்டா
என்றும்
கேள்வி எழுப்பினர்
காசு வந்தது.
"வேலை தொடங்குக விரைவில்"
என்றும்
உத்தர விருந்தது.
மந்திரியாரும் அழைத்துக் கதைத்தார்

வேலை தொடங்கினான் முர்ஸித்
நாலுநாளாக நின்றான் களத்தில்

எண்பது கிலோ மீற்றர்
தொலைவில்
வீடு இருந்தது.
சென்றும் வரலாம்
ஆயினும்-
நின்று வேலை செய்வது
என்றே
நினைத்துக் கொண்டான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையில் மிகுந்த
கண்ணாய் இருந்தான்
மந்திரி யாரின் மதிப்பும்
பா.உ. அவர்களின்
மகிழ்வும் சேரலாம்!

விழாக்கள் முடிந்தன.
விரைந்தார் பா.உ.
கொழும்பில் அவரின்
பெரிய வீட்டுக்கே!
வால்கள் ஊரில் சுருட்டிக் கொண்டன.

"தேர்தல் வரும் வரைப்
போதுமா?" என்று
பா.உ. கேட்டது
மனதில் வந்தது!

ஒதுக்கிய பணத்தில்
ஒரு சிறுதொகையே
எஞ்சிஇருப்பதை
மனக் கணக்காகப்
பார்த்துக் கொண்டு

வாகனத் தேறி
அமர்ந்தான் முர்ஸித்!
விரைந்தது வாகனம்
வீட்டை நோக்கியே!

* பா.உ- பாராளுமன்ற உறுப்பினர்

* எ.க.உ- எதிர்க் கட்சி உறுப்பினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்-8

## நைட்டியில் மினுங்கிய நிலவு

நாய் குரைத்தது
நேரம் நன்கு பிந்தி யிருந்தது!.
ஊரில்
வீடு வந்து சேர்ந்தான் முர்ஸித்!
காரில் வந்து இறங்கிக் கொண்டவன்
கராஜில் நின்றான்.

குளிர்.
குளிரில் நடுங்கி
மேகப் போர்வையால்
மேனியை இறுகப்
போர்த்தி இருந்தது நிலவு!

நெருப்புப் பொறிதான்
பறந்து வந்த தோ?
இமைகள் விழிகளை
மூட அசைகையில்
சட்டென மின்னல்
வெட்டி மறைந்தது

உடைந்து போனதோ
வான மாமலை?
கரங்கள் காதினை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்வதற் கிடையில்
முழங்கி வெடித்தது வானம்!

வெடித்துக் கீறல்
விழுந்து போனதாய்
இரைந்து பொழிந்தது
பேயாப் பெருமழை!
நடந்தேறு கின்றதோ திருமண விழாக்கள்
தவளைகட் கிடையே.

தூரத்திருந்த துரவுக ளிருந்து
குரலை கேட்டது
மாறி மாறியே!

வெளிச்சம் வந்தது வெளியே!
கதவு திறந்தது.
பளபளத்தது நைட்டியில் நிலவு!
குளிரில் சற்றுக்
கொடுகி இருந்தது.

"கூதலோ"
கேட்டான் சவரில் வெந்நீர் குளித்து
தலையினை துவட்டிய முர்ஸித்.
"நாலு நாளாக வேலையோ
வாசனைத் திரவியம்
தடவிய படியே
வார்த்தை உதிர்த்தது
நிலவு.

பார்வையால் அவனை முழுமையாய் மேய்ந்து
புகுந்து கொண்டது
போர்வையுள் மீண்டும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடவே போர்வையில
புகுந்து கொண்டது இணையும்!

மெத்தைக் கென்ன
மூச்சுத் திணறலோ?
அமர்ந்து அமர்ந்து
எழுந்தது மேலே...!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்-9

## மீண்டும் மீண்டும் இருமிய மாஸ்டர்

இருமல்  இருமல்...
இருமிக்கொண்டே
இருந்தார் மாஸ்டர்!

விழிகளில் வழிந்த நீரைத் துடைக்க
விரல்களை ஏனோ
நீட்ட மறந்தார்!

ஒருவித மான
உளைச்சல் மனசில்!
எழும்பி நடக்க
எண்ணிய போதும்
கண்கள் இருண்டு
கால்கள் மறுத்தன!

முதுகின் நடுவில்
ஏதோ இருந்து
இழுத்து இழுத்துப்
பிடிப்பதைப் போல
நோவும் வலியும்!

துடைக ளிரண்டிலும்
தோலும் சுருங்கி
ஊர்ந்து ஊர்ந்து கடிப்பதாகவே
சொறிச்சல்..எரிச்சல்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதுகைத் தொடவும்
இயலா திருந்தது
இந்த வேளையில்
ஏனோ மனசு அவளை நினைத்தது!

மனைவி ஹபீபா..!
மனசு நிறைந்த
நங்கணச் சோடு!

மகளின் வீட்டில்
மனைவி ஹபீபா..
மகனார் வீட்டில் மாஸ்டர்!

மாஸ்டர் அழுதார்..

இந்த வேளையில்
அவளுங் கிருந்தால்...

முதுகைத் தடவி
ஒத்தட மிடுவாள்
"சித்தா லேபயைக்"
கரண்டியில் வைத்து
கொஞ்சம் போல சூடு காட்டி
அழுத்தித் தேய்த்துப்
பூசியும் விடுவாள்!
"குல் சூறாக்கள்"
எல்லாம் ஓதி
ஊதியும் விடுவாள்!

அடித் துடைக்குள்ளே
ஆர்கை விடுவது
அவளை விட்டால்?
சொறிச்சல் போகச்
சொறிந்திடுவாளே.. சுகம் தருவாளே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏக்கப் பெருமூச் செழுந்தது
மாஸ்டர்
மீண்டும் மீண்டும்
இருமிக் கொண்டார்..
பலத்த சத்தமாய்....!

இருமல் சத்தம்
பலமாய் ஒலித்து..
கட்டிலில்-
மனைவியின் மடியில்
தலைவைத்த படியே
புத்தக மொன்றைப்
புரட்டிய மகனைப்
புரட்டிப் போட்டது!

இருமல் சத்தம்
கேட்ட திசையில்
கால்கள் ஓடின.!

மாஸ்டரின் அறையில்
மகனும் மனைவியும்
வந்து நின்றனர்!

இருமிக் கொண்டே
இருந்தார் மாஸ்டர்
இளைத்தும் போனார்!

கழுத்து நீண்டு
கைகளும் கால்களும்
குச்சிகளாகி
உடலும் மெலிந்து
தெரிந்தார் மாஸ்டர்!
வாப்பாவின் நிலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனசைக் குடைய
மகனின் கண்கள்
நீரைச் சொரிந்தன!
"மருந்தெடுக் கலையா..?"
மனைவியைக் கேட்டான்!

ஆங்கில மருத்துவம்
அனைத்தும் பார்த்ததாய்
மனைவி சொல்ல..,

"வாப்பா நாங்களேதும்
குறை வைத்தோமா?"
அழுதபடியே கேட்டார்
மகனார்!

அழுதே விட்டார்
அகமது மாஸ்டர்!

நல்லதை நினைத்த
பிள்ளைகள் அவர்கள்,
தள்ளாத வயதில்
தந்தையும் தாயும்
தாமாய் இருந்து
பணிகள் புரிந்து
கஷ்டப் படுவதைக்
காண வொண்ணாது
வசதிகள் செய்ய நினைத்தவர் அவர்கள்!

தந்தையைத் தாயை
தவிக்க விட்டு
எத்தனை பிள்ளைகள் ஓடிச் செல்கிறார்!

"பெரிசு இதுகளால்
ஏது பய"னென


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனசு புண்படப்
பேசும் பிள்ளைகள்..

முதியோர் இல்லம்
சேர்த்தே விட்டு
கடமை முடிந்த தாய்ப்
பிரியும் பிள்ளைகள்..

சொத்தை விற்றுப்
பணத்தை எடுத்தபின்,
தந்தை தாயைத்
தெருவில் விட்டு..
வெளிநா டேகி-
சோடியாய்ச் சுகமாய் வாழும் பிள்ளைகள்..

ஆள் வால் பிடித்துப்
புகழினைப் பெற்றபின்
வாப்பா பெயரை மறைக்கும் பிள்ளைகள்..

இவர்களுக் குள்ளே..
"எங்கள் பிள்ளைகள்
தங்கம்"
என்றவர் நினைத்தார்!

"இல்ல மகனே
உங்க உம்மாதான்
ஊருலகம் தெரியாதவ
என்ன செய்றாவோ தெரியா "
என்றார் அழுது!
மகனும் அழுதான்
மனைவி துடைத்தாள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்-10

## அலைபேசியில் அலறிய தங்கை

தந்தையின் நிலைமை
தன்மனம் வருத்த
அஞ்சினான் முர்ஸித்
அவன்மிக நொந்தான்!

ஆசிரிய ராக, அவர்
வாழ்ந்த வாழ்க்கையும்
அதிபர் கடமையில்
அவரின் உருவமும்
கண்முன் விரிந்தது!

தந்தையின் நடையும்
கம்பீரப் போக்கும்
மந்திரமாகும் அவரின்
பேச்சும்
மனதில் வந்தது!

வாப்பாவின் பேச்சில்
வசீகர மிருந்தது!
ஆளுமை உறுதி
ஆற்றல்கள்
வாய்த்தன!
கூர்மதியாலே பலரையும்
ஈர்த்தார்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்புடன் வாழ்ந்த
மனிதர் வாப்பா!

கலண்டரின் தாட்கள்
கழன்று, கழன்று...
காலச் சக்கரம்
சுழன்று சுழன்று..

அகவை கரைந்து
இளமை மறைந்து..
முதுமை..

அடங்கிப் போன
சிங்கம் போல
நடையும் தளர்ந்து
குரலும் கம்மி..
வாப்பா!

கண்கள் பனிக்கக்
கனத்தது நெஞ்சம்!
தங்கையை அழைத்துத்
தகவலைச் சொன்னான்!

அலை பேசிக்குள்
அலறிக் கொண்டே
அழுதாள் தங்கை
அவனும் சேர்ந்தான்!

தந்தையின் உபாதையைக்
கேட்டுத் தெரிந்தவள்
தாயின் நிலைமையை
எடுத்துச் சொன்னாள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் உடல்நிலை குன்றி வருவதை
ஏக்கம் தவிப்பு
முகத்தில் தெரிவதை
அடிக்கடி அவளும்
புலம்பிக் கொள்வதை
சொன்னாள் தங்கை!

"இரண்டொரு மாத
இடைவெளி விட்டு
தந்தையை வந்து
பார்த்து வருபவர்
சிலநாள் இருப்பார் கலகலப்பாக..
பின்னர் ஏனோ
மாறிப் போகிறார்!
தனியாய் உம்மா குந்தி யிருந்து
வெறித்துப் பார்க்கிறார்!
தன்னை மறந்து ஏதோ
கதைக்கிறார்"
என்றாள் தங்கை!

அலைபேசிக்குள்
அழுது கரைந்தன
அந்தக் குரல்கள்!

கேட்டுக் கேட்டு
தாங்க முடியாச் சோகம் வந்ததோ?
தவித்துப் போனதோ?
"றீலோட்" தண்ணீர் கேட்டு நின்றதோ?
தானாய்
நின்று போனது அலைபேசி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்-11

## நான்கு மாடியில் நிமிர்ந்த கட்டடம்

நகரில்,
நாற் சந்தி பிரியும்
முக்கிய இடத்தில்..
நான்கு மாடியில்
நிமிர்ந்த கட்டடம்!

வடிவாய்ப் புதிதாய்
வர்ணப் படங்கள்
அமைந்த சுவரொடு..,

ஆங்கிலம், சுதேசம்
உளவள மருத்துவம்
அனைத்தும் பார்க்கும்
சிகிச்சை நிலையமாய்
ஓங்கி நின்றது..

முதியவர்க் காக அமைக்கப் பட்ட
விசேட, தனியார்
மருத்துவ நிலையம்!

வாப்பா உம்மா இருவரோடும்
வந்து நின்றான் முர்ஸித்!
கூடவே துணைக்கு
தம்பி எஹியா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை எத்தனை
விதமாய் முதியவர்...!
கூனிப் போயும்..
பொல்லின் துணையில்
மெல்ல நடந்தும்..
நடக்க முடியா நிலையில்
கைத் தாங்க லாகவும்..
பார்வை குறைந்தும்
செவிப்புல னின்றியும்...
சும்மா சும்மா..
எதையோ கதைத்துக் கொண்டும்
விரக்தியில் எதையோ
வெறித்துப் பார்த்தும்...
எத்தனை விதமாய் முதியவர் இங்கே!

முர்ஸித் பார்த்தான்!

நின்ற இடத்திற்கு நேரே
ஆங்கொரு மரத்தின்
கீழே.
பத்து ஆண்டுகள்
பழக்க முள்ள
ஆசிரியர் குடும்பம்!
கிட்ட நெருங்கி,
"ஐயா" என்றான்!

பார்க்கவே இல்லை;

தத்துவ பாடம்
கற்றுக் கொடுத்தவர்
"தத்துவ வித்தகர்"
நாமமும் பெற்றவர்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவனின்.
பேச்சு ஆற்றலை
வளர்த்தும் விட்டவர்
பேசாதிருந்தார்!

"ஐயா..ஐயா...!
மீள மீள
அழைத்துப் பார்த்தான்!

எத்தனை தடவை
அழைத்த போதும்
பேசவே இல்லை!

"என்னையும் மகளையும் தவிர
இப்ப எவரையும் அவருக்கு
ஞாபகமில்ல".

அழுதபடியே சொன்னார்
அவரின் மனைவி!

உள்ளே இருந்து
அழைப்பு வந்ததாய்
தம்பி சொல்ல
ஓடினான் முர்ஸித்!

வரிசை ஒழுங்கில்
வாப்பா உம்மா
இருவரோடும்
வைத்தியர் அறைக்குள்
வந்து நின்றான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் நோய்களைக்
கேட்டுத் தெரிந்த பின்
பரி சோதனைகளைச் செய்த
வைத்தியர்,
அறிவுரை பகர்ந்தார்!
“உடல் சார்ந்த
நோய்களுக் கெல்லாம்
மருந்து தரலாம்!
முதுமையில்-
அறிவுத் திறனில் வீழ்ச்சி,
ஞாபக மறதி,
மனச் சோர்வு,
விரக்தி
இப்படி-
பற்பல நோய்கள் சேரும்!

கூட்டுக் குடும்பமாய்
இருந்த மக்கள்,
தனித்தனித் தீவாய்ப்
பிரிந்து போனதால்..
உறவு நிலைகள்
சீர்குலைந் திட்டதால்..
மரியாதைப் பண்பு
மதிப்பு என்பன குறைந்து விட்டதால்..
பிரியத்தோடு இருந்த உறவுகள்
பிரிக்கப் படுவதால்
மன இறக்கம், விரக்தி யென்று
பிணிகள் கூடும்!
முதுமையில் இந்த
நோய்களை அகற்ற.
தனிமையை நீக்குதல்..,
கலந்துரை யாடுதல்...,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலகலப்பாக இருக்க முனைதல் ...
கட்டாயம் " என்றார்!

தந்தையை தாயை
தனித்தனியாக
அழைத்துக் கதைத்தவர்,
இவர்கள் இருவரும் ..,
சேர்ந்து வாழ
இடமளியுங்கள்...
பிணிகள் நீங்கும்
மகிழ்ச்சி பிறக்கும்
என்றும் சொன்னார்!

வைத்தியர் சொல்ல..

விழிகள் பனித்தனர்
தாயும் தந்தையும்!

முர்ஸித் ஏதோ
முடிவெடுத் தவனாய்
மருந்தை,வில்லையைப்
பெற்றுக் கொண்டு
வெளியே வந்தான்
தாயும் தந்தையும்
பின்னால் ஊர்ந்தனர்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல்-12

# விசேடமாய் நடந்த விருந்துபசாரம்

விருந்துபசாரம் தடபுடலானது!
தந்தையின் அழைப்பில்
வந்துசேர்ந் திருந்தனர்
மக்கள்- மருமக்கள் அனைவரும்!
பேரன் பேர்த்திகள்
கூடவே வந்து,
ஆடிப் பாடி ஓடித் திரிந்தனர்!

முர்ஸித் பார்த்து
முகம் மலர்ந்திட்டான்!

தாயும் தந்தையும்
மீள ஒன்றாய்
வாழத் தொடங்கி
மாதம் இரண்டு!

பாசம் பிரித்த
நேசப் பறவைகள்
சேர்ந்து இன்று
இரண்டு திங்கள்..!

சிகிச்சை நிலையம்
இருந்து வந்த பின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயைத், தந்தையை..,
தம்பி இருந்த வீட்டில் வைத்தான்!

தாயும் தந்தையும்
தம்பியும் மனைவியும்
சேர்ந்து வாழ்ந்தனர்!
அந்த வீட்டினில்!

முர்ஸித், மனைவி
பிள்ளைகளெல்லாம்
நாள் தவறாமல்
வந்து வந்து
பார்த்துச் சென்றனர்!

தங்கை ..,
பிள்ளைகள்
வாரமொருமுறை
வந்து சென்றனர்!

விசேடமாய் இன்றோர்
விருந்து நடந்தது
அந்த வீட்டினில்!

காலையில் பூத்த வெள்ளை மலராய்
மலர்ந்து தெரிந்தது
வாப்பாவின் முகம்!
உம்மா கூட
உசாராய் இருந்தார்!

“உங்க உம்மாவ நான்
கைப்பிடிச்சு
அம்பது வரிசமாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்மா சொன்னா”
என்றார் வாப்பா!

உள்ளம் மலர்ந்தது!
உவகை மிதந்தது!
உம்மா கொஞ்சம்
வெட்கப் பட்டார்!

பிள்ளைக ளெல்லாம்
கட்டி அணைத்து
முத்தமிட்டனர்!

இறைவ னிடத்தில் கரங்களை
ஏந்தி
இன்னும் இன்னும் பல்லாண்டு வாழ,
இறைஞ்சிக் கேட்டனர்

ஆமீன். ஆமீன் என்ற குரல்கள்
அந்த வீடெலாம்
நிறைந்து ஒலித்தது!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலமுனைப் பாறூக்கின் கவிதைகளும் மூன்று காவியங்களும்

பாலமுனைப் பாறூக்கின் அண்மைக் காலக் காவியங்களைத் தனித்தனியே படித்திருந்த போதும் மூன்று காவியங்களையும் ஒரே தொகுப்பாகப் பார்க்கக் கிடைப்பது ஒருங்கிணைந்த இலக்கிய அனுபவமாகும். சில இடைவெளிகள் காணப்பட்டாலும் பாலமுனை பாறூக் இலக்கிய உணர்வுகளில், இலக்கியச் செயற்பாடுகளில் தொடர்ந்து வாழ்பவர்.

சமூகத்தையும் மக்கள் வாழ்வையும் பதிவுகளாக்குகின்ற கவிதைகள் காவியங்கள் காலாவதியாகி விட்டனவா என்ற கேள்விக்கு அவரது மூன்று காவியங்களும் நம் கண் முன் பதிலாக விரிகின்றன. கலையின் சமூக வெளிப்பாடு அல்லது இலக்கியத்தின் சமூகக் கடப்பாடு என்ற பாதையில் பாலமுனை பாறூக்கின் கவிதை கள் பயணிக்கின்றன. மக்களின் வாழ்க்கையில் அல்லது சமூக ஏற்றத்தாழ்வுகளில் இருந்து கவிதைகளுக்கான உந்து சக்திகளை அவர் பெற்றுக் கொள்கிறார். சமூகக் கடப்பாடு, பண்பாட்டை மீளத் தேடுதல் இன்று அவரது கவிதைகளின் கருப் பொருள்களாக இருந்தாலும் சமூக மாற்றம், முற்போக்கு சமவுடைமைச் சிந்தனை களுடன் தான் அவரது கவிதை உலகப் பிரவேசம் நிகழ்கிறது.

**முற்போக்கு யுகம்**

1960கள் தமிழ் கவிதைப் பரப்பில் முற்போக்கு சமஉடைமைச் சித்தாந்தங்கள் அதிகம் ஆக்கிரமித்திருந்த காலப்பகுதி. இக்காலப்பகுதியில் சம உடமை சார்ந்த கருத்துக்களைப் பேசிய முஸ்லிம் கலைஞர்கள் இலக்கிய வாதிகள் பற்றி ஒரு பெயர்ப் பட்டியல் நம்மிடம் உண்டு. பண்ணாமத்துக்கவிராயர் (பாறூக்), கலைவாதி, கலீல், எம்.எச்.எம். ஷம்ஸ், எம்.பி நிஸ்வான் எனப் பத்துக்கும் அதிகமானவர்கள் இப் புதிய பயணத்தில் பங்கேற்றிருந்தனர். இவர்களில் அநேகர் "இன்ஸான்" பத்திரிகையோடு தொடர்புள்ளவர் கள். பாலமுனைபாறூக் இன்ஸான் பண்ணையை சேர்ந்தவரல்ல,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் அதற்கு அடுத்த தலைமுறைக் கவிஞர்.

1960கள் ஒரு மறுமலர்ச்சி யுகம். இன்ஸான் பத்திரிகையின் தாக்கம் கவிதைக் கருத்துக்களிலும், சிறுகதைப் படைப்புக்களிலும் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகிறது. இன்ஸான் பண்ணையில் வளர்ந்தவர்கள் என்று அந்த யுக எழுத்தாளர்கள் பெருமையுடன் தம்மைக் கூறிக் கொண்டார்கள். நவீன இலக்கியச் செல் நெறியில் சமூக மாற்றத்திற்கான கருத்துக்களும் உணர்வுகளும் இலக்கிய அழகுடன் அரவணைக்கப்பட்ட காலம் அது. இன்ஸான் பத திரிகையின் பின்புலத்தையும் உட்படுத்தி அந்த யுகத்தைப் "புதிய அலைக் காலம்" என்று வர்ணிக்கலாம்.

2016ல் வெளிவந்த பண்ணாமத்துக்கவிராயர் பாரூக்கின் "காரவன்கீதங்கள்" (இக்பால் கவிதைகள் மொழிபெயர்ப்பு) நூலுக்கு எழுதிய முன்னுரையில் **"1968 அளவில் உருவான முஸ்லிம் இலக்கிய புதிய அலை எழுச்சியோடு பண்ணாமத்துக்கவிராயரின் இலக்கியப் பயணம் ஆரம்பிக்கின்றது"** என்று எழுதியிருந்தேன். அப்போது அவர் இஸ்லான் பத்திரிகையின் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். இன்ஸான் பத்திரிகையின் ஆசிரியர் ஏ.ஏ.லத்தீப்.

இன்ஸான் காலம் முஸ்லிம் இலக்கிய மரபில் தவிர்க்க முடியாத இலக்கியக் காலப் பிரிவு. வாய்ப்புக் கேடாக இன்ஸான் பத்திரிகையின் வீழ்ச்சியோடு (1968 – 1970) அந்த யுகம் முடிவை நோக்கிப் பயணித்தது. அதைப் பேச நாதி இல்லாத நிலை இன்றும் நீடித்துச் செல்கிறது.

"இன்ஸான்" இலக்கியக் குழுவினர் முஸ்லிம் கவிதை மரபில் சமூதாய உணர்வுக்கும் சமூக மாற்றச் சிந்தனைகளுக்கும் தம்மை அர்ப்பணித்து இலக்கியம் செய்தனர். இன்ஸான் வீழ்ந்தாலும் இன்ஸான் பாதை மூடப்படவில்லை. பிந்திய அல்லது அடுத்த தலை முறைக் கவிஞரிடத்திலும் இன்ஸான் பாதிப்பு, வெளிப்படையான சமுதாய நோக்கிற்கு வழி வகுத்தது.

இதற்கு அடுத்துவந்த பிரிவை, பாலமுனை பாறூக் பிரதிநிதித்துவம் செய்த அணியினர் எனக் குறிப்பிடலாம். சமுதாய நோக்கும் முற்போக்கு இலட்சியமுமுள்ள கவிதைகளைப் பாறூக் படைத்தார். அன்புடீன், அஷ்ரப் சிஹாப்தீன், திக்குவல்லைக் கமால், அன்பு ஜவாஹர்ஷா, கவிஞர் ஜவாத் மரைக்கார் போன்ற பலரை இதில் உள்ளடக்கலாம். இன்ஸான் இலக்கியவாதிகளின் உலகப் பார்வை பெரிதும் சமத்துவ முற்போக்குச் சிந்தனைகளின் தாக்கத் திற்கு உட்பட்டது. சமய வைதீக கருத்துக்களை அவர்கள் தாண்டிச் சென்றனர். சமூக மாற்றக் கருத்துக்கள் சமவுடமைக் கொள்கைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாத்தில் இருப்பதை அவர்கள் சுட்டிக்காட்டினர். கவிதை களிலும் எழுத்துக்களிலும் அவற்றை இவர்கள் வெளிப்படுத்தினர்.

மத சார்பற்ற மனிதாபிமான உணர்வுகளை இக்கவிஞர்கள் தங்கு தடையின்றி வெளியிட்டனர். அந்த வீச்சும் எழுச்சியும் அடுத்த தலைமுறையினரிடம் அதிக செல்வாக்கைப் பெறவில்லை.

1960களில் இருந்து 1980கள் வரை அன்றைய புதுத் தலைமுறை எழுத்தாளர்களின் சிந்தனைகள் இடது சாரித்துவம், முற்போக்கு, மானிட நேசம் சார்ந்ததாக இருந்துள்ளது. 1980களின் பின்னர் இந்த உலகப் பொதுச் சித்தாந்தங்கள் தணிவடைந்து சென்ற தோடு இஸ்லாமிய ஆன்மீக வழியில் சமூக சிந்தனைகள் பேசப்படு கின்றன. சிலர் ஆன்மீகத்தையும் கலைப்பாங்கை மட்டும் தெரிவு செய்து கொண்டனர். பாறூக்கின் கவிதைகளிலும் இதன் செல் வாக்கைக் காணலாம். இந்தக் கால கட்டங்கள் அனைத்தோடும் அவருக்குத் தொடர்பிருந்தது.

காலக்கட்டங்கள் மாறினாலும் பாறூக் இலட்சியமாக்கிக் கொண்ட முற்போக்கு மற்றும் சமத்துவக் கொள்கைகள் முற்றாக செயலிழந்துவிடவில்லை. மானுடநேயம் என்ற பொதுப் பொருளில் அவை அவருள் கவிதைக்கான உந்துதலாக அமைந்திருப்பதையும் எம்மால் உணர முடிகிறது.

பேராசிரியர். செ.யோகராசாவின் ஒரு கருத்தை இங்கு நினைவு கூரலாம். **"நவீன கவிதை வளர்ச்சியில் அறுபதுகளளவில் முற்போக்குக் கவிதை செல் நெறி முகிழ்க்க ஆரம்பித்தது. எழுபதுகளிலும் தொடர்ந்தது. இந்த எழுபது கால கட்டத்தில் இடது சாரிச் சிந்தனையால் ஆகர்ஷிக்கப்பட்டு இத்தகைய கவிதை எழுதியோரில் ஒரு சாரார் முஸ்லிம் கவிஞர்கள். ஈழத்துக் கவிதை வரலாற்றில் இடம் பெறத் தவறிய கவிஞர் சிலருள் பாலமுனை பாறூக் முக்கியமானவர்".**

பாலமுனை பாறூக்கின் முற்போக்குப் பார்வையினை அடையாளப்படுத்தும் காலப் பிரிவு 1970 1990 என்று குறிப்பிடலாம். குமரன், தேசாபிமானி, அக்னி, களம், புதுயுகம், திருப்பம், தமிழ் நாட்டின் செம்மலர் போன்ற இடது சாரிச்சஞ்சிகைகளில் அவரது இக்காலப் பிரிவுக் கவிதைகள் பல வெளிவந்துள்ளன.

அன்புடீனின் "நெருப்பு வாசல்" சிறுகதைத் தொகுதிக்கு எம். அப்துல் ரஸாக் எழுதியுள்ள வெளியீட்டு உரையில் கூறியிருப்பது போல **"60, 70களில் கூர்மை கொண்டிருந்த பேசு பொருட்கள் அன்புடீனின் கைகளிலும் கதைகளாகி இருக்கின்றன."** என்ற இதே கூற்று பாலமுனை பாறூக்கின் தொடக்க காலக் கவிதைகளுக்கும் பொருத்தமான தெனக் கூறிவிடலாம். மேலாண்மைக்கும் அதிகாரத்திற்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரண்டலுக்கும் எதிராக இவர்கள் கலகம் செய்தனர். ஏழைகளுக்கான எதிர்காலத்தை அவர்கள் கனவு கண்டனர்.

விழித்துவிட்டோம் இனியும் நாம்
வழி தவறி வீழ மாட்டோம்
புரியாத புதிரெல்லாம் புரிந்ததாலே
புறப்பட்டோம் ஆகையினால்
சரித்திரத்தை மாற்றிவிடத் தயங்க மாட்டோம்.

என்ற வரிகளிலும்

முஅத்தினார் மௌத்தானார்.
இந்த உலகிற்கு இவர் எதையும் சேர்க்கவில்லை
இதனாலேயே போடியார் வீட்டு மௌத்திற்கு வந்தது போல்
ஆள் கூடி வரவில்லை
அநேகம் பேர் இருக்கவில்லை.

என்ற வரிகளிலும் சமுதாய ஏற்றத்தாழ்வைச் சாடும் உறுதியான பார்வையை நாம் பார்க்கிறோம். "பதம்" என்ற அவரது கவிதைத் தொகுதி பேசும் பிரதான பொருள் இந்த இலட்சியங்களுக்கு உட்பட்டவைதான்.

பதம் தொகுதியில் உள்ள கவிதைகள் பற்றி பேராசிரியர் நுஃமான் : **"மதவிழுமியங்களுக்கும் சமூக நடைமுறைகளுக்கும் இடையில் உள்ள முரண்பாடுகள் அவருடைய பதம் தொகுப்பில் உள்ள பல கவிதைகளில் வெளிப்படுகின்றன. குறிப்பாக வறுமைப் பட்ட பெண்களின் சமூக நிலை இவரது பல கவிதைகளில் பேசப் படுகிறது"** எனக் குறிப்பிடுகிறார். ஆனால் முப்பது வருடங்களின் பின்னர் பாறூக்கின் கவிதை மாற்றமடைகிறது. பழைய சமதர்மப் பாதையில் பயணிக்கும் வாய்ப்புக்கள் மறைந்தது ஒரு காரணமாக இருந்தாலும் சமூக, சமய மாற்றங்கள் பல நிகழ்ந்து விட்டன. தனிக் கவிதைகளிலிருந்து காவியம் என்ற வடிவத்துடன் அவரது இரண்டாவது பிரவேசம் நிகழ்கிறது. பழைய உணர்வுகள் தடைப் பட்டுவிட்டன என்பது இதன் பொருளல்ல.

**கொந்தளிப்பு**

2010ன் பின்னர் அடுத்தடுத்து மூன்று காவியங்களை பாறூக் வெளியிட்டார். "கொந்தளிப்பு" குறுங்காவியத்துடன் அவரது புதிய கவிதைப் பயணம் ஆரம்பமாகிறது. தோட்டுப்பாய் மூத்தம்மா, எஞ்சியிருந்த பிரார்த்தனைகள் அடுத்து வெளிவருகின்றன. பண்பாட்டையும் மரபுகளையும் நினைவூட்டிய படி மனதைத் தாக்கும் கிழக்குப் பிராந்திய முஸ்லிம் பிரச்சினைகள் சிலவற்றை இக் காவியங்கள் மூன்றும் பேசுகின்றன. நடந்த சம்பவங்களைத் திரட்டித்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரும் சம்பவங்களின் தொகுப்பல்ல இக் காவியங்கள். போராட்டம் நிறைந்த மனித வாழ்வில் மனதை நெருடும் அத்தியாயங்களைப் பாறூக் காவியங்களாக்கி உள்ளார். "மழைக் காவியங்கள்" "புயல்க் காவியங்கள்" என்ற முந்தைய மரபை மனிதக் காவியமாக பாறூக் மாற்றுகிறார்.

முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் வாழ்க்கைப் பிரச்சினைகளும் நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் மோதல்களும் சமூகத்தின் மீது சுமத்தப்படும் அரசியல் சவால்களும் இக் காவியங்களின் முக்கிய பேசு பொருள்களாகி உள்ளன. இரண்டாம் கட்டக் கவிதைகளில் நமது மனதை ஆழமாகத் தொடுவது கிழக்கின் மண்வாசனைதான். மண்ணின் வேர்களில் இருந்து மரபுகளாகத் துளிர்த்து இன்று அழிவை நோக்கித் தள்ளப்படும் பல பண்பாட்டுக் கூறுகளை இக்காவியங்கள் நினைவுபடுத்துகின்றன. பண்பாட்டுப் பதட்டம் இதில் நிகழ்ந்திருப்பதையும் பாறூக் இக்காவியங்களில் சுட்டிக் காட்டுகிறார். கொந்தளிப்புக் காவியம் அபூர்வமான களத்தில் நடக்கும் சம்பவங்கள். ஆனால் நாம் நன்கறிந்த கதை. சுனாமிப் பேரலையை மையப்படுத்திய கதைக் களத்திலிருந்து இக்காவியம் ஆரம்பமாகிறது.

காவியத்திற்குள் ஒரு குறுநாவலைக் கூற முயற்சிப்பது போன்ற ஒரு இலக்கிய உத்தி கொந்தளிப்பில் தெரிகிறது. நீண்ட காலம் எழுதிப் பெற்ற பயிற்சி இக்காவியத்தை அழகுபடுத்துகிறது. ஒரு நாவலாசிரியனுக்குரிய கதை வடிவத்தை பாறூக் காவியமாகக் கையாண்டிருப்பதாக பேராசிரியர் நுஃமான் கூறுகிறார்.

பாறூக் தரும் காட்சி விம்பம் ஒன்று இவ்வாறு அமைகிறது. **"சன சந்தடி மிகுந்த கடற்கரையில் ஒரு மாலை நேரத்துக் காட்சியுடன் ஆரம்பமாகிறது காவியம். ஆதம் காக்கா தனியே ஓரமாய் ஒதுங்கி நின்ற ஒற்றைத் தென்னையின் கீழே வந்து அமர்ந்து கொண்டார். அவரின் நினைவோட்டங்களாக கவிதை விரிகிறது. ஆழிப் பேரலை அனர்த்தம் அவரது நினைவில் எழுகிறது" அதில் அள்ளுண்டு போன மனைவி மக்களின் நினைவு அவரைத் துயரத்தில் ஆழ்த்துகிறது.** *(எம்.ஏ.நுஃமான்).*

**ஆழிக் கடலெனும் அழகுப் பெண்ணாள்**
**நீலச் சேலை அணிந்தே இருந்தாள்**
**வெள்ளைக் கரையோடு**
**வண்ணச் சேலை**

என்று கடலின் அழகைக் கூறும் வரிகளுடன்தான் கொந்தளிப்புக் காவியம் ஆரம்பிக்கிறது.

கடற்கரை அழகுதான். கடலருகே வெண் மணற்பரப்பில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்திருந்து மாலைப் பொழுதில் பேசிக்கழிப்பதும் அழகுதான். கிழக்குக் கிராமங்களில் கடற்கரை அருகில் ஒன்று கூடிக் காணும் காட்சி அவர்களின் வாழ்க்கையின் ஒரு அங்கம் போன்றது. எத்தனை பேர், எவ்வளவு கூட்டம். ஆதம் காக்கா கடற்கரையில் அமர்ந்து பார்க்கும் போது சன சந்தடி. சுனாமிப் பேரலையுடன் இன்றைய அமைதிக் கடலை ஆதங்காக்கா ஒப்பிட்டுப் பார்க்கிறார்.

அழகை ரசிக்கவா
அமைதியைப் பெறவா
ஆடவர் பெண்டிர்
அருகருகிருந்து
கொஞ்சவா குலவவா
எத்தனை பேர்கள்
எத்தனை பேர்கள்

ஆழிப் பேரலையின் அழிவு ஆதங்காக்காவின் மனதைத் தாக்கியது. வானம் வரை உயர்ந்து ஊரை அழித்த கடலா இது? ஆழிப் பேரலை ஏன் நிகழ்ந்தது?

அழகுக்கள்தான் ஆபத்ததிகமோ
பிழைகள் நடந்ததோ பேரலை பொங்க

மானிடர் செய்த பாவங்களால் தான் பேரலை பொங்கி கிராமங்களை விழுங்கியதாக உலவிய கதைகள் கொஞ்சமா? மிம்பர்களிலும் இந்த முழக்கம் கேட்டது.

கொந்தளிப்பென்று கொடூரம் புரிந்த அந்தக் கடல்தான்
இந்தக் கடலா

எண்ணிப் பார்த்தார். இதயம் வலித்தது.

சுனாமியில் அள்ளுண்டு போன மனைவி பிள்ளைகள் என்ற ஆறாத் துயரத்துள் அமிழ்ந்தார் ஆதங்காக்கா. கிழக்கிலங்கையின் முஸ்லிம்களையும் எல்லா மக்களையும் பாதித்த நிலவரங்களை எண்ணிப் பார்க்கிறார். ஆதங்காக்கா என்ற ஒற்றைப் பாத்திரத்தின் நினைவுகளாய்க் காவியம் நகர்கிறது.

கதைக்கட்டமைப்புக்கள் இந்தக் காவியங்கள் மூன்றையும் கவனிப்புக்குரியவை ஆக்கியுள்ளன. அவை நாமறிந்த , நமக்கு நெருக்கமான கதைகள். பாறுக் நினைவுக்கெட்டாத காலத்திற்கு எம்மை அழைத்துச் செல்லவில்லை. அக்கதைகள் இப்போதுதான் நடந்து முடிந்துள்ளன.

கிழக்கு மக்களின் வாழ்க்கையைப் புரட்டிப்போட்ட ஆழிப்பேரலையின் ஆட்டம் இங்கு பதிவாகிறது. ஆயிரக்கணக்கான உயிர்களையும் ஆயிரக்கணக்கான வீடுகளையும் கடல் விழுங்கிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்கதை, ஒரு ஒற்றை மனிதனின் இழப்பிலும் வேதனையிலும் இருந்து காவியம் பேசப்படுகிறது.

சுனாமி அனர்த்தங்களிலிருந்து வாழ்க்கையை சீரமைக்க மக்கள் போராட வேண்டியிருந்தது. ஆதங்காக்கா கவலைகளை மட்டும் பேசவில்லை. கிராமங்களை மீளக் கட்டியெழுப்பும் முயற்சி களில் பாதிக்கப்பட்ட மக்கள் புறந்தள்ளப்பட்டனர். யார் யாரோ எல்லாப் பயன்களையும் அள்ளிச் சென்றனர். கொடிய அக்காட்சிகள் ஆதங்காக்காவின் நினைவுக்கு வருகின்றன.

**நெத்தலிக்கென்று போட்ட இரையை**
**சுறாக்கள் வந்து**
**சுருட்டிக் கொண்டதாய்**
**கட்டிடமிருந்தோர்**
**தொழில் இழக்காதோர்**
**கடலே எதுவெனக் காணாதவர்கள் பெற்றெடுத்தார்கள்**
**பெருந்தொகையாகவே**
**கடலின் பக்கம் வந்தறியாதோர்**
**படகை இழந்ததாய்**
**பத்திரம் வைத்தார்**

வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன ஆனால் அவை மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவில்லை என்ன கொடுமை இது? துக்கம் தொண்டையை அடைத்தது. ஆதங்காக்கா துயருற்றார்.

**எட்டாக் கனியவை**
**என்று நினைக்க**
**துக்கம் தொண்டையைக் கட்டிக் கொண்டது.**

காலம் சற்று நகர வயல் வேலைக்கு மெஷின்கள் வந்து சேர்கின்றன. வாழ்வை இயந்திரமாக்கிய இயந்திரம் என்று பறாக்கின் காவியம் கூறுகிறது. வயல் வேலைக்குத் திரளும் மக்கள் கூட்டம் இன்று தேவையற்றதாகிவிட்டது. ஆதம் காக்கா முன்னேற்றத்தின் எதிரி அல்ல. ஆனால் வயலை நம்பி வாழ்ந்தவர்களை, ஏழைகளை அவர் எண்ணிப் பார்க்கிறார்.

வயலோடும் நெல் மணிகளோடும் ஒன்றிக் கிடந்த வாழ்வும் மண்சார்ந்த மரபுகளும் காணாமல் போன காட்சி கண்டு ஆதங் காக்கா அதிர்ந்து போனார். இயந்திர வாழ்கை ஆரம்பமாக, மரபுகள் மாயமாக மறைந்தன. ஆயிரக்கணக்கான ஏழை மக்களை ஒன் றிணைத்த வயற் காட்டு மரபுகள் சடங்குகள் மறைவதைக் காட்டும் அடையாளங்களை அவலத்துடன் பார்க்கிறார் ஆதங்காக்கா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிசி வெட்டு மெஷினே வந்து
அரித் துக் கொன்றது
வெளியான் மார்களை
கடப் பொலி இல்லை
தலப் பொலி இல்லை
கதிர்கள் பொறுக்கும்
பெண்டுகள் இல்லை.
தாக்கத்தி இல்லை
ஏக்கத்திலானோம்.

*கிராமங்களின் சரித்திரங்கள் சாய்வது போன்ற ஒரு உணர்வு, தவியாய்த் தவித்தார் ஆதங்காக்கா. மண்ணையும் மக்களைச் சூழ்ந்த மரபுகளையும் நேசித்தவர் ஆதம்காக்கா*

பரணின் மேலே உயரக் கம்பின்
கணவா லாம்பின்
வெளிச்சம் தெரியும்
கொடியேற்றப் பள்ளியின் மீனாரா போல

*ஆதங்காக்கா எண்ணிப் பார்க்க அனேக விடயங்கள் இருந்தன. திரும்பி வராப் பொற்காலத்தை இவர் மனதில் நெய்து பார்த்தார். மெஷின்களின் யுகத்தில் மனிதப் பெறுமானங்கள் நிலைப்பதில்லை. ஆதங்காக்காவின் உள் மனம் குமுறுகிறது.*

இலயித்து அவர் மனம் சுவைத்து
வாழ்ந்திட்ட வாழ்க்கை
விலகியதாய் விட்டு விட்டு
நழுவியதாய் உணர்ந்தார்.

*மனித இருப்பினை நிலைகுலையச் செய்யும் புறநிகழ்வுகளும் அகக் குமுறல்களும் ஒன்றினையும் நனவுச் சித் திரங்கள் ஆதங்காக்காவை வரைந்து பார்க்கின்றன.*

......................

"இயந்திரமாய் போனதிந்த வாழ்க்கை என வெந்தார்"

*ஒரு நாவலின் தொனி அந்தக் காவியத்துக்குள் இருந்தது. மெஷின்களின் வருகையாலும் பல்வேறு சமூக தாக்கங்களாலும் மண் வாசனை மிக்க மரபுகள் சிதைந்தழியும் காட்சியைக் கூறும் ஒரு சமூகவியல் பார்வையை பாறூக் இதில் அழகாக வெளிப் படுத்துகிறார்.*

**தோட்டுப்பாய் மூத்தம்மா**

*தோட்டுப்பாய் மூத்தம்மா பாலமுனை பாறூக்கின்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது காவியம். கிராமியக் கதைப் போக்கை விரித்துரைக்கும் காவியம். அவர் வாழும் மண்ணின் மற்றொரு முதுசம் தோட்டுப்பாய் மூத்தம்மா. ஆதங்காக்காவும் தோட்டுப்பாய் மூத்தம்மாவும் கிழக்கு மண்ணின் பண்பாடு பேசும் பாத்திரங்கள்.

எழுபது வயதில் மரணித்த உயர் குடிப் பெண்தான் மூத்தம்மா. அவளது இயற்பெயர் செய்னம்பு. செய்னம்புவிற்கு நடந்த பொருந் தாத் திருமணம், மண முறிவை எதிர் நோக்கும் மூத்தம்மா, மறுமண வாழ்வில் மூத்தம்மா, மூத்தம்மாவின் மரணம் என்று மூத்தம்மாவைச் சுற்றி விரிகிறது காவியம். காவியம் முழுக்கப் பதிவு பெற்றிருக்கும் பண்பாட்டுத் தடங்கள்தான் காவியத்தைத் தூக்கி நிறுத்தும் தூண் களாக காட்சி தருகின்றன.

பண்டைய மரபொன்றின் கவிதைப் பதிவு இவ்வாறுள்ளது:

**சுன்னத்தை முடித்து**
**தலை மழித்து நீராட்டி**
**அரை மூடி சலங்கை யென**
**அணிகலன்கள் தான் இட்டார்.**
**சாணைக் கூறையிட**
**சம்பந்தம் வந்திருந்தாள்**
**மாமா நூல் போட வென**
**மகிழ்வோடு காத்திருந்து**
**உம்மாவின் கடைசித் தம்பி**
**ஒருமுடிச்சைப் போட்டு வைத்தார்.**

பண்பாட்டைக் கதையாக்கி, கட்டுரையாக்கிப் பார்ப்பது ஒரு வகை முயற்சி. காவியமாய்க் காண்பது ஒரு புது அனுபவம்.

ஒவ்வொரு காவியங்களிலும் அவர் உருவாக்கி உள்ள கதை மாந்தர்கள், காட்சிப் படிமங்கள், கற்பனைகள், இலகு நடைக் கவிதைகள் காவியங்களின் அழகை மெருகூட்டுகின்றன. வரலாற்றுச் சம்பவங்களை ஆவணமாக்கும் பணி அல்ல இது. வாழ்வின் உண்மைகளையும் அதிர்ச்சிகளையும் அழகையும் தூரிகையால் சித்திரிக்கும் நிகழ்ச்சி. திருத்தமான வரிகளும் தேர்ந்தெடுத்த சொற் களும் பண்பாட்டை முன்னிறுத்தும் மரபுகளின் சங்கமம் காவியங் களை நெஞ்சுக்கருகே கொண்டு வந்து விடுகின்றன. தடையற்ற வாசிப்பு சாத் தியமாகிறது.

சாத்வீகமும் பண்பாட்டுப் பார்வையும் பாறூக்கின் அணுகு முறைகள். அவரது இரண்டாம் கட்ட காவிய கால மனநிலையாக இதனைக் குறிப்பிடலாம். எனினும் அழுத்தமாக சொல்ல வேண்டியதிலிருந்து அவர் தப்பிச் சென்று விடுகிறார் என்பது இதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தம் அல்ல. ஒரு உதாரணத்தை மட்டும் இங்கு பார்ப்போம். அஞ்சு வண்ணம் தெருவில் தோப்பில் மீரான் கூறுவதற்கு ஒப்பான காட்சி இது. தோப்பில் மீரான் நாவலில் கூறிகிறார். பாறாக் கவிதையில் தருகிறார்.

காலம் மாறி இருந்தது. புதிய இயக்கக் கருத்துக்கள் மக்கள் மன்றத்திற்கு வந்து விட்டன. தேங்காய்ப் பட்டினத்தில் நடந்தது பாலமுனையிலும் நடந்தது. மெஷின் ஊருக்குள் ஊடுருவும் முன்னரே கபுரடிகளிலும் பள்ளி வராந்தைகளிலும் சச்சரவுகள் ஆரம்பித்து விட்டன. கருத்தொற்றுமை சீர் குலைந்ததை கவிஞர்கள் பேசாமல் வேறு யார் பேசுவது

தோட்டுப்பாய் மூத்தம்மாவில் வரும் ஒரு காட்சி இது. தோட்டுப் பாய் மூத்தம்மா இறந்து விட்டாள், அடக்கும் கருமங்கள் தொடங்கின.

வெள்ளப் புடவை சுருமா
பன்னீர் அத்தரென
எல்லாமே ஒவ் வொன்றாய்
சேர்த்தெடுத்தார் ஊரார்கள்
புறப் பட்டு மையத்து
போயிற்று சன் தூக்கில்
தோட்டுப்பாய் மூத்தம்மா புதை குழிக்குள். ஆனால்,
கருத்துப் பேதங்கள் தலைக்கேறின. மண் மூடி
மேடமைத்து மிஸான் கட்டைகளைக் குத்திய பின்
ஓதென்றார் ஒருவர்

"தல்கீனை ஓதுவதே தகும்" என்றார் "தல்கீனா சீவனற்ற கட்டைக்கா? துவாவை ஓதுங்கள் மக்கள் நற்பயன் பெற்றிடுவர்." மற்றொரு குரல். பிரிந்தார்கள் ஜமா அத்தார்.

தல்கீனைச் சிலர் ஓத
குத்துபாவைச் சிலர் ஓத
பிரிந்தே கலைந்தார்கள்

முன்னொரு நாள் ஜமா அத்தார் பிரிந்தே வாழ்ந்த கதையின் ஒரு சம்பவக் கூறு இதில் படிந்துள்ளது. இது கற்பனையல்ல. இவை என்ன? இவை ஏன் நடக்கின்றன? கவிஞனாக கண் கலங்குகிறார் பாறாக்.

வெட்கித்து மையத்தில்
குத்தி இருந்த கொத்துகளும்
இது கண்டு கூனிற்று குறுகிற்று
வானம் இருண்டு முழாங்கிற் று
பின் அழுதிற்று மழையாய்.
எஞ்சிய பிரார்த்தனையோடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எஞ்சிய பிரார்த்தனையோடு**

கடந்த முப்பது ஆண்டும் போரில் கிழக்கில் நடந்த தமிழ் - முஸ்லிம் உறவையும் விரிசல்களையும் ஒரு சமாதான நோக்கிலிருந்து அணுகும் மற்றொரு காவியம் "எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு" இலங்கையின் இன முரண்பாட்டுச் சூழலில் கிழக்கின் தமிழ்-முஸ்லிம் உறவுகளில் ஏற்பட்ட நெருக்கடிகளையும் வன்முறைகளை யும் இக்காவியம் கூறுகிறது.

முஸ்லிம் - தமிழ் உறவில் ஏன் இந்த விரிசல் ஒரே பிராந்தியம், ஒரே மொழி, உணர்வுப்பரிமாற்றங்கள் எல்லாம் இருந்தும் மோதல்கள் எப்படிச் சாத்தியமாகின. அவ் வப்போது சச்சரவுகள் சிறு மோதல்கள் நடந்திருந்தாலும், இவை ஏன் பூதாகாரமாக்கப்பட்டன. ஒற்றுமைக் கான கதவுகள் ஏன் திறக்கப்படவில்லை. ஒரே மொழி என்ற பாலத்தை மக்கள் ஏன் பயன்படுத்தவில்லை. எத்தனை கேள்விகள்.

இவை குறித்து ஒரு உரையாடல் தொடரலாம் அல்லவா? பாறுக்கின் எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு அத்தகைய புரிந் துணர்வுக்கான ஒரு அழைப்பாகவும் விளங்குகின்றது.

யார் பேரிலும் அவர் பழியைப் போடவில்லை. அவர்களா இவர்களா என்றில்லை. பரஸ்பரம் பல சம்பவங்கள் நடந்தேறி உள்ளன. ஆனால் நிலையான சமாதானத்தை நோக்கிய அடுத்த நகர்வு என்ன பாறுக் இக்காவியத்தில் அப்படியொரு கேள்வியைத் தான் எழுப்புகிறார்.

**பிரித்து வைத்தவர் யார் யார்**
**பிரிந்து நின்றவர் யார் யார்**
**மோத விட்டவர் யார் யார்**
**மோதிக் கொண்டவர் யார் யார்**
**துளைகள் இட்டன**
**கேள்வி வண்டுகள்**
**அருவி வெட்டின**
**கண்கள்!**

ஒன்றிணைந்தும் புரிதல் உணர்வோடும் ஒரு பிராந்திய மக்கள் என்ற ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்பிய எத்தனை சம்பவங்கள் இன்று எம்மைப் பார்த்து சிரிக்கின்றன. அவை முந்தைய வாழ் வொழுக்க மாக இருந்தாலும் கவிஞர் உள்ளத்தில் அவை பசுமையான உணர்வு கள். அடுத்த தலைமுறைக்கும் இவ்வுறவை கொண்டு செல்ல அவர் விரும்புகிறார்.

அது இந்திய அமைதிப்படைக் காலம். போரின் அவலம் எல்லாத் திசைளிலும். "மனசை அடைத்த வெப்புசாரமும் வயிற்றில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூண்ட அக்கினிப் பசியுமாய்" தனது வீடு நோக்கி வருகிறான் ஒரு முஸ்லிம் இளைஞன். வீட்டில் யாருமில்லை. தனித்து நின்ற அவனைப் பார்க்கிறாள் அடுத்தவீட்டு பார்வதி அக்கா. மோதல்கள் சச்சரவுகள் எதுவும் அவள் மனதில் இல்லை. பயத்தில் நடுங்கி நின்றவனுக்கு தண்ணீர் கொடுக்கிறாள் பாதுகாத்து உதவுகிறாள். அப்போது அவளது மனதில் தோன்றிய காட்சிகள் இவை.

**வண்டிக்கார முஸ்லிம்கள்**
**தமிழர் ஒன்றாய்ச் சேர்ந் து**
**ஒற்றுமையாகவே**
**காட்டினிற் சென்று**
**கம்புகள் வெட்டி**
**கோயிலைப் பள்ளியைக்**
**கட்டிக் கொண்டதை**
**பள்ளிவாசலில் கந்தூரி ஆக்க**
**கொள்ளித் தறித்து**
**கொடுத்து மகிழ்ந்ததும்.**

பார்வதி அக்காவின் பழைய நினைவுகள் உறவுப் பாலமாய் காவியத்தை அழகுப்படுத்துகிறது.

**பேராசிரியர் எம்.எஸ்.எம் அனஸ்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீளப்பறக்கும் நங்கணங்களை
## எங்ஙனம் மறக்கும் மனசு..?

நங்கணமாய்ப் பறக்கும் அகமது மாஸ்டரை
எங்ஙனம் மறக்கும் மனசு..?
மகள் வீட்டில் உம்மாக்களும்
மகன் வீட்டில் வாப்பாக்களும்

எண்ணப் பறவை சிறகடித்து விண்ணில் பறக்க
ஏக்கத்தில் வாடும் நிகழ்கால நிதர்சனம் இது!

விழியில் விழுந்து இதயம் நுழைந்து உயிரில் கலந்த உறவை
மிக உயர்வாகச் சொல்லிச் செல்கிறது இந்த நங்கணப் பறவை!

"சொற்சுவை தெரிதல் வேண்டும்
சுவைபடச் சொல்தல் வேண்டும்
கற்பனை வளர்தல் வேண்டும்
கவிநயம் பிறப்பில் வேண்டும்!"

மேற்கண்டவாறு கவியரசு கண்ணதாசன் சொன்னதை, கீழ்க்கண்டவாறு பாவேந்தலுக்குச் சொல்லலாம். சொற் சுவையைத் தெரிந்து வைத்திருக்கின்றார். சுவைபடச் சொல்கின்றார். கவிநயத்தைப் பிறப்பிலேயே பெற்றிருக்கின்றார்.

கண்ணதாசனின் "மாங்கனி போலும் சாரண பாஸ்கரனாரின் "யூசுப் -சுலைஹா" போலும், பாவேந்தல் பாலமுனை பாறூக்கின் இந்த மீளப் பறக்கும் நங்கணங்களும் நிச்சயம் வாழும்.

பொன்விழா நாயகனின் சமவயதுச் சூழ்நிலைகள் கண் விழா மற் போகாமலா இருக்கும்? சிலவேளை இவரது எண்ணத்தில் எழுந்த அடிகள் எங்கோ எவருக்கோ விழுந்த அடிகளாகவும் இருக்கலாம்.

சில பென்னம் பெரிய புத்தகங்களில் ஏழெட்டுப் பக்கங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும் மேலே இன்று வரைக்கும் வாசித்து முடிக்காத நான், மீளப்பறக்கும் நங்கணங்களை ஏழெட்டுத் தடவைகள் முழுமனதோடு முழுமையாகப் படித்தேன்.என் விழிகளின் விளிம்பினில் விழுகிற துளிகளில் நிழலாடி நிற்கின்றார் அஹமது மாஸ்டர்.

அங்கதங்கள் பாடும் பாலமுனை பாறூக் முதுமைப் பிரிவின் தனிமைத் துயரின் சங்கடங்கள் பற்றி மீளப் பறக்கும் நங்கணங்கள் மூலம் தந்திருப்பது நவீனமல்ல; Now ஈனமாய்...

சூழ்நிலைக் கைதிகளாய் ....

நம்மைச் சார்ந்த சில பிள்ளைகள் உணர மறந்த உண்மைகள்.

இவரது "கொந்தளிப்பு" இன்றும் அடங்காமலேயே இருக் கிறது என் கவிதை மனசுக்குள். தோட்டுப் பாய் மூத்தம்மாவும் அடிக்கடி கனவில் வந்து போகிறா.

இவை, மீளப் பறக்கும் நங்கணங்களா?

தாழப் பறக்கும் நங்கணங்களா? இனி, எல்லோருடைய நெஞ்சங் களிலும் ஆழப்பறக்கும் நங்கணங்கள்.

இங்ஙனம், இவர் நங்கணமென்று குறியீடாய்க் கூறும் "மைனா"...

இதை வாழ்த்தா திருக்குமோ My நா?

மஞ்சள் நிறக் கழுத்தும் கொண்டையும் கொண்ட மலையக நங்ஙணம் அழகாக இருக்குமாம். பாலமுனை நங்கணத்தின் பாட்டில் இருக்கின்ற இனிமை அந்த மலையக நங்கணத்தின் குரலில் இருக்குமோ என்னவோ?

இந்நவீன காவியத்தைப் படித்த பின் என் "உள்மனசு" தருகிற சான்றிதழ் இது..

கல்வி அமைச்சு இதைப் பாட நூலில் ஒரு பாடமாகச் சேர்க்கலாம்.

சினிமா ஆர்வ வாலிபர்கள் இதனைத் திரைப்படமாகவும் எடுக்கலாம். அப்படி எடுத்தால் நிச்சயம் வெல்லும்.

படித்துப் பாருங்கள்!

நம் மனங்களுக்குள் மீளப்பறக்கும் இந் நங்கணங்கள் நிச்சயமாய்..!

**சந்தக் கவிமணி கிண்ணியா அமீரலி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளப் பறக்கும் நங்கணங்கள்

பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களின் நான்காவது காவியம் இது. ஐம்பது வருட கால இலக்கிய அனுபவமும், முற்போக்கான சிந்தனையும் கொண்ட இவரின் வெளியீடுகள் இலக்கிய உலகில் பரிசுகளையும் விருதுகளையும் வென்றுள்ளன.

எமது தேசத்து இலக்கியப் பரப்பில், நவீன காவியப் படைப்பில் தனக்கென தனியான ஒரு இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ள பெருமைக்குரியவர் பாவேந்தல் பாலமுனைபாறூக் அவர்கள்.

சமூக நலன் சார்ந்த விடயங்களைப் பாடுபொருளாகக் கொண்ட இவரின் காவியங்களில் "மீளப் பறக்கும் நங்கணங்கள்" முற்றிலும் வித்தியாசமான -அதிகம் பேசப்படாத விடயங்களை மையப் படுத்தி முதுநிலைப் பருவத்தினரின் உள்மனக் கிடக்கைகளை உணர்வு பூர்வமாக உராய்ந்து வெளிக்கொணர்ந்த காவியமாகத் திகழ்கிறது.

அஹமது மாஸ்டர் ஹபீபா தம்பதியர், மண வாழ்க்கையின் ஆரம்பம் முதல் இன்ப துன்பங்களில் இணை பிரியாமல் இருந்தவர்கள்...

பிள்ளைகளின் நிர்வகிப்பின் காரணமாக மகள் வீட்டிலும், மகன் வீட்டிலுமாக அவர்கள் பிரிந்து வாழ்வதைப் பற்றி கவிஞர் விளிக்கும் காட்சியில்...

"அன்பு மனைவியாய்...
பேராதரவாய்...பிரியமாய்
பிரியாதிருந்தவர்
பிள்ளைகள் மூன்றைப்
பெற்று வளர்த்தவர்
பேரனோடு ஒட்டி இருக்கிறார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலரை தசாப்த
திருமண உறவில்
புருசனே சொர்க்கமாய்
பூத்துச் சொலித்தவள்

நல்லது கெட்டதில்
கலந்து கதைத்தவள்
எல்லாம் அவளே
என்றும் இருந்தவள்...

இரண்டரை வயதுப் பேரனோடு இருப்பதில்
ஒருவித திருப்திதான்
எனினும்
இடைவெளி தெரிந்தது."

கணவனை நினைத்து கண்கள் பனித்து உள்ளம் பதைக்கும் மனைவி படும் பாட்டை இப்படி தத்ரூபமாக எடுத்தியம்புகிறார்.

(ஒன்றாய்க் கிடந்த
ஒரு சோடி நங்கணத்தை
இரண்டாய்ப் பிரித்த அந்த
இருண்ட கதை தானிதுவே)

கணவன் மனைவி இணைந்து வாழும் வாழ்க்கை என்பது தாம்பத்திய உறவையும் பிள்ளைகள் பெற்று வளர்ப்பதையும் மாத்திரம் மையப் படுத்தியதல்ல;

அன்பு, நட்பு, சேவை, தேவை என பல்வேறு பரிமாணங்களில் ஒருவருக்கொருவர் துணையாக இருப்பதையே இருமனம் சேர்ந்து ஒரு மனமாகி இணைபிரியாமல் வாழ்வதாக குறிப்பிடப்படுகின்றது. ஆனால் பல இடங்களில் வயோதிப தாய் தந்தையினரைப் பிரித்து பிள்ளைகள் தத்தமது தேவைகளுக்காக பயன் படுத்தி வருகின்றனர். இவற்றால் ஏற்படும் வகை தொகையான அவலங்களை இக்காவியத்தில் கவிஞர் அழகுற வடித்துள்ளார்.

இயல் 9 இல்...

"இருமல் இருமல்...
இருமிக்கொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தார் மாஸ்டர் !

விழிகளில் வழிந்த
நீரைத் துடைக்க
விரல்களை ஏனோ
நீட்ட மறந்தார் !

ஒருவித மான
உளைச்சல் மனசில் !
எழும்பி நடக்க
எண்ணிய போதும்
கண்கள் இருண்டு
கால்கள் மறுத்தன !

முதுகின் நடுவில்
ஏதோ இருந்து
இழுத்து இழுத்துப்
பிடிப்பதைப் போல
நோவும் வலியும் !"

இக்கட்டான சூழ்நிலையில் மனைவியின் துணை மருந்துகளுக்கு மேலானது என்பதை பூடகமாக இந் நவீன காவியத்தில் புனைந்து தனது அறிவினை, அனுபவத்தினை கவித்துவ ஆற்றலைப் பயன்படுத்தி அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையான முறையில் இனிக்க இனிக்க தெவிட்டாத அமுதமாக வடித்துள்ளார் கவிஞர் !

பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்கள், இப்படியான சமூக நலன் சார்ந்த இன்னும் பல நூல்களை இவ்வுலகிற்கு பெற்றுத்தரு வதற்கு.... நோய் நொடியற்ற நீண்ட ஆயுளை வழங்க வேண்டுமென வல்ல இறைவனை ப்பிரார்த்தித்தவனாக வாழ்த்துகிறேன்.

**நாட்டாரியல் கலைஞர், ஓவியர் எழுகவி ஜெலீல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞரின் நூல் வரிசை...

- பதம் - 1987 கவிதைத் தொகுப்பு
- சந்தனப் பொய்கை - 2009 கவிதைத் தொகுப்பு
- கொந்தளிப்பு - 2010 நவீன காவியம்
  (இலங்கை அரச சாஹித்ய மண்டல சான்றிதழ் பெற்றது)
- தோட்டுப்பாய் மூத்தம்மா - 2011 நவீனகாவியம் (இலங்கை அரச சாஹித்ய மண்டல விருது, கொடகே சாஹித்ய மகாகவி உருத்திரமூர்த்தி விருது, இலங்கை இலக்கிய பேரவை (யாழ்ப்பாணம்) சான்றிதழ் பெற்ற நூல்)
- எஞ்சியிருந்த பிரார்த்தனை - 2012 நவீனகாவியம்
- பாலமுனை பாறூக் குறும்பாக்கள் -2013
- வலைக்குள் மலர்ந்த வனப்பு - 2017
- பாலமுனை பாறூக்கின் மூன்று நவீன காவியங்கள் (2020)
- மீளப் பறக்கும் நங்கணங்கள் (2020)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாலமுனை என்னுங்கால் பாறூக் நினைவுவரும்
ஆரவனை வெல்லுவார் அன்னோன்தன் - பேனாவால்
சொல்லுங் கவிதைகளில் சொக்காதார் ஆருளரோ
வெல்லுங் கவிபாடும் வேந்து!

- கலாபூஷணம் கவிஞர் ஏ.எம்.எம்.அலி

பாருக் கெனப்பிறந்து பாவுக்காய் வாழ்வுதனைப்
பாருக் களித்திருக்கும் பாவல்லான். - ஆராயின்
பால முனைகடந்து பாவின் முதிர்புலத்தே
கால்கொண்ட தமிழும்மைக் கால்வழியன். - நூலிலைகள்
வான்பரப்பி நிற்பதன்ன வார்நிலத்தும் ஊடுருவி
வேரிறக்கிப் பாமரக்கா வேய்குபவன். - மாண்புறுத்தும்
பொன்விழவு பாவேந்தின் பூர்வம் கதைக்கட்டும்!
இன்னுமோர் ஐம்பதாண்டை ஈயட்டும்! - கண்ணியத்தின்
நூற்றாண்டும் இவ்வுலகு நோக்கட்டும் என்றிறைபால்
ஆற்றுகிறேன் வேண்டுகைநெஞ் சால்.

- கவிமாமணி அல் அசூமத் அப்துல் அஸீஸ்.

ISBN 978-955-0958-62-7
9 789550 958627

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org